JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 14 | இதழ் 12 | பிப்ரவரி 2024 |
ஆண்டு சந்தா ₹ 100



எத்தனை முறை
நான் அவரின் அன்பை
விட்டு விலகி போனாலும்,
அவர் என் மீது வைத்திருப்பது

## ஆச்சரியமான

# அன்பு

உள்ளே...



# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.




**30,000 வாலிபர்கள்**
கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிக்கை
உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேலும் தொடர்புக்கு 9750955547

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

*ஆசிரியர்:* **மோகன் சி. லாசரஸ்** *இணை ஆசிரியர்:* **அவினாஷ்**
*ஆசிரியர் குழு:* வயலா | ரேச்சல் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜாண் | காட்வின் | ஜெனிபர் | ரெபேக்கா டேவிட்
*வடிவமைப்பு:* 'இயேசு விடுவிக்கிறார்' வடிவமைப்பு குழுவினர்

# தலைவாசல்



அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

அன்பு என்று சொல்லும் போது அநேகருக்கு மனதில் வருவது, ஆண், பெண் இருவருக்கும் நடுவில் ஏற்படும் அன்பு மட்டுமே. பல தலைமுறையாய், யுகங்களாய் இந்த அன்பு (காதல்) பல விதங்களில் பேசப்பட்டு வருகிறது. இந்த காதல், நேசம் அனைத்தும் பல வேதனையான முடிவுகளைத் தந்தாலும், இன்றும் இந்த மனித அன்பு தான் மேன்மையாகப் பேசப்படுகிறது, போற்றப்படுகிறது, புகழப்படுகிறது. இந்த அன்புகளுக்கு எல்லாம் மேலான ஒரு அன்பு உண்டு. அது ஆச்சரியமான அன்பு, விளங்கிக் கொள்ள முடியாத அன்பு, நிபந்தனையற்ற அன்பு.

## ஏன் அது ஆச்சரியமான அன்பு என்றால்...

### தெரியாது

- **அந்த அன்புக்கு மறக்க தெரியாது** – எத்தனை முறை நான் அவரின் அன்பை மறந்து விலகி போனாலும், என் மீது அவர் நினைவாய் உள்ளார், என்மீது நோக்கமாய் இருக்கிறார்.
- **அந்த அன்புக்கு என்னை அவமானப்படுத்த தெரியாது** – எவ்வளவு துணிகரமாய் அவரை புறக்கணித்து, பாவத்தில் உழன்று, பரிசுத்த வாழ்க்கையில் தவறி விழுந்து விழுந்து எழுந்தாலும் என் மகன்/மகள் மீண்டும் எழுவான் என்று என் நிர்வாணத்தை மூடி பல முறை தூக்கி எடுத்து, தொடர்ந்து ஓட செய்யும் அன்பு.
- **அந்த அன்புக்கு என்னை புறக்கணிக்க தெரியாது** – ஒன்றுக்கும் உதவாதவன் என்று உலகமே தூக்கி எறிந்தாலும், உபயோகமில்லை என்று புறக்கணித்தாலும் என்னை குப்பையிலிருந்தும் புழுதியிலிருந்தும் தூக்கி எடுத்து, புடமிட்டு பயன்படுத்தும் அன்பு.

### தெரியும்

- **அந்த அன்புக்கு மன்னிக்கத் தெரியும்** – உலகத்திலே மிக பெரிய பாவம் விபச்சார பாவம். அந்த பாவத்தை செய்த ஸ்தீரியை யாரும் மன்னிக்கவில்லை. மாறாக கொலை செய்ய கற்களை எடுத்தபோது, தன் கரங்களால் மன்னிப்பையும் தன் வார்த்தையினால் மறுவாழ்வையும் கொடுக்க அந்த அன்புக்கு தெரியும்.
- **அந்த அன்புக்கு உடைத்து உருவாக்க தெரியும்** – பல அசைக்க முடியாத பாறை போன்ற உள்ளங்களை தன் கரத்தின் வல்லமையால் உடைத்து உருவாக்கி, வல்லமைப்படுத்தி புதிய கூர்மையுள்ள கருவியாக மாற்றி, துலக்கமுள்ள அம்பாக மாற்ற அந்த அன்புக்கு தெரியும்.
- **அந்த அன்புக்கு உயர்த்தி மேன்மைப்படுத்த தெரியும்** – உன் வீழ்ச்சியையும், தோல்விகளையும் ஓயாமல் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் உன் சத்துருவின் முன்னால், உனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி உன் தலையை எண்ணெயினால் அபிஷேகம் செய்து, உன்னை உயர்த்தி மேன்மைப்படுத்த, அந்த அன்புக்கு தெரியும்.

**இத்தனை ஆச்சரியமான அன்பு நம் ஆண்டவராகிய இயேசுவின் அன்பு மட்டுமே!**

எனக்கன்பான வாலிபனே, இன்றைக்கு அந்த ஆச்சரியமான அன்பு, தன் இருக்கரத்தையும், நீட்டிய வண்ணம் உனக்காக காத்திருக்கிறது, உன்னை மறுபடியும் மன்னித்து மறுவாழ்வு கொடுக்க, உன்னை உருவாக்கி ஆயுதமாக பயன்படுத்த, உன்னை உயர்த்தி மேன்மைபடுத்த.

நீ வாழும் இந்த காலத்தில், அவரின் அன்பை அறியாத, உணராத, கேள்விப்படாத எண்ணற்ற வாலிப கூட்டம் இன்னும் கோடி கோடியாக உண்டு

**உண்மை அன்பை உலகுக்கு உரக்கச் சொல்ல நீ வேண்டும்.**
**உயர்ந்த அன்பை ஊர் ஊராக எடுத்துச் சொல்ல நீ வேண்டும்.**
**இந்த எழுப்புதல் நாட்களில் நீ பார்வையாளன் அல்ல, பங்காளன் என்பதை மறக்காதே!!**
**ஆச்சரியமான அன்பை ஆசையாய் சொல்லு, அகில உலகிற்கும் ஆவலாய் சொல்லு!!**

கிறிஸ்துவின் பணியில்
**அவினாஷ்**

சாட்சி தொகுப்பு: பெனிட்டா

# மறவாமல் நினைத்தார்!



**கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து சிறுவயதிலேயே ஆண்டவரோடு நல்ல ஐக்கியத்தில் இருந்தாலும், வாலிப வயதில் ஆண்டவரோடு உள்ள உறவு துண்டிக்கப்பட்டு இயேசுவுக்கும் அவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லாமல் இருந்த சகோதரர் ஜோயல் அவர்களை இயேசுவின் அன்பு எப்படி இழுத்தது என்று அவரிடமே நாம் கேட்டுத் தெரிந்து கொள்வோமா?**

### உங்களது சிறுப்பிராயம் மற்றும் குடும்பத்தைப் பற்றி சொல்லுங்களேன்?

கோயம்புத்தூர் பட்டணத்தில் நல்ல ஜெபிக்கிற, விசுவாசத்தில் வைராக்கியமுள்ள பெற்றோருக்கு ஒரே மகனாகப் பிறந்தேன். எனது பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பை கோவையில் படித்தேன். தற்பொழுது **B.Sc 3rd year** படித்து வருகிறேன். எனது தகப்பனார் அரசாங்க அலுவலகத்திலும், எனது தாயார் ஒரு பள்ளியில் ஆசிரியராகவும் பணிபுரிந்து வருகிறார்கள். சிறுவயதிலேயே எனது பாட்டி தாத்தா என்னை ஞாயிறு பள்ளி மற்றும் ஆலயத்துக்கு அனுப்புவது, வசனங்களை படிக்க வைப்பது, விடுமுறை வேதாகம பள்ளிக்கு அனுப்புவது என ஆலயத்தில் என்ன நிகழ்ச்சியாக இருந்தாலும் அதில் தவறாமல் கலந்துகொள்ள என்னை உற்சாகப்படுத்தி அனுப்பி வைப்பார்கள். சிறு வயதிலேயே கர்த்தரைத் தேடும் பழக்கத்திற்குள் என்னை வளர்த்து வந்தார்கள்.





### சூப்பர்... சிறு வயதிலேயே கர்த்தரைத் தேடும் பக்தியில் வளர்க்கப்பட்ட நீங்கள், உங்களது இளம் வாலிப வயதில் எப்படி இருந்தீர்கள்?

8ஆம் வகுப்பு வரை ஆலயத்துக்கு செல்வது, சினிமா பார்ப்பது மற்றும் உலகப்பிரகாரமான காரியங்களையும் செய்து வந்தேன். முழுமையாக ஆண்டவரை இப்படித்தான் தேட வேண்டும் என்று அப்பொழுது எனக்கு தெரியாது. ஒரு பக்கம் வேதவசனம் படிப்பது, ஆலயம் செல்வது, ஜெபிப்பது போன்ற செயல்களை தினமும் தவறாமல் செய்து வந்தேன். அதே நேரத்தில் சினிமா பார்ப்பது பாவம் என்று தெரியாமல் அதையும் இன்னொரு பக்கம் தினமும் பார்த்து வந்தேன். 9ஆம் வகுப்புப் படிக்கும்போது நண்பர்களுடன் இணைந்து உலகப்பிரகாரமான பல பாவக் காரியங்களை செய்ய ஆரம்பித்தேன்.

நாட்கள் செல்ல செல்ல ''ஏன் ஆலயத்துக்குப் போக வேண்டும்?

போக வேண்டிய அவசியம் இல்லையே..!'' என ஜெப வாழ்க்கையும் குறைய ஆரம்பித்தது. ஜெபம் குறைய குறைய உலக வாழ்க்கை மேலோங்க ஆரம்பித்தது. சினிமா பார்ப்பதற்கு முதலிடம் கொடுக்க ஆரம்பித்தேன். கர்த்தரைத் தேடுவதை முற்றிலும் குறைத்துக் கொண்டேன். நாட்கள் செல்லச் செல்ல ஒரு வசனத்தை மட்டும் படிப்பது, 23ஆம் சங்கீதம் அல்லது 91ஆம் சங்கீதத்தை படிக்காமல், அப்படியே பார்த்துவிட்டு பள்ளிக்கு செல்லுவேன். இயேசுவுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லாத வாழ்க்கை தான் வாழ்ந்து வந்தேன். நான் அவரை ஒரு கடவுளாக மட்டுமே பார்த்தேன். ஆனால் அவர் எனக்குள் வாசம் பண்ண விரும்புகிறார் என்று விரும்பி அவரை அழைத்தது இல்லை.





**எப்படி இருந்த வாழ்க்கை எப்படியோ மாறிவிட்டது... சரி அதன்பிறகு இயேசுவை ஏற்றுக் கொண்டீர்களா? அல்லது பாவக்காரியங்கள் தொடர்ந்ததா?**

தொடர்ந்து கொண்டே தான் இருந்தது. நான் 10ஆம் வகுப்பு படிக்கும்போது இன்னும் அநேக பாவக் காரியங்களை (இச்சை, சினிமா, ஆண்டவரை தூசிப்பது, நண்பர்களுடன் சேர்ந்து வெளியே சுற்றுவது) செய்ய ஆரம்பிதேன். வாழ்க்கையை ஜாலியாக அனுபவிக்க வேண்டும் என்பதே எனது சிந்தையாக இருந்தது. ஆண்டவரை விட்டு பின்வாங்க ஆரம்பித்ததும் என் படிப்பிலும் பின்வாங்கிப் போனேன். தேவையற்ற நண்பர்களோடு என் நேரத்தை அதிகம் செலவழித்துக் கொண்டிருந்ததால் 10ஆம் வகுப்பு தேர்வில் பெரிய ஏமாற்றத்தை சந்தித்தேன். நான் மிகவும் நன்றாக படிக்கும் மாணவன். ஆனால் 73% மதிப்பெண்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இவ்வளவு குறைவான மார்க் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ஆனால் ஆண்டவருடைய கிருபையினால் தேர்ச்சி பெற்றேன். அதன்பிறகு நான் கேட்கிற குரூப் கிடைக்காது என்று சொன்னார்கள். 11ஆம் வகுப்பு வந்தபோது இன்னும் அதிகமான பாவங்கள் செய்ய ஆரம்பித்தேன். போன் இல்லாமல் என்னால் இருக்கவே முடியாது. Social mediaவில் Tiktok, games என மணிக்கணக்கில் நேரம் செலவழிப்பேன். 11ஆம் வகுப்பு படிக்கும்போது PubG, facebook, instagram, whatsapp, tiktok போன்றவற்றில் நான் பெரிய ஆள் என்று காட்ட பல பதிவுகளை வெளியிடுவேன். கடமைக்காக ஆலயத்துக்கு போவேனேத் தவிர ஆண்டவருக்கு எனக்கும் எந்த தொடர்பும் இருக்காது.





**சரி... Social mediaவுக்கு அடிமைப்பட்டிருந்த நீங்கள் எப்படி இயேசுவை ஏற்றுக் கொண்டீர்கள்?**

2020ஆம் ஆண்டு 11ஆம் வகுப்பு பொது தேர்வுக்கு ஆயத்தமான வேளையில் Lock down வந்தது. அந்த நாட்களில் வீட்டைவிட்டு எங்கும் போக முடியாததால், மொபைலும் லேப்டாப்பும் தான் என் பொழுதுபோக்கு. இதோடு தான் என் முழு நேரத்தையும் செலவிட்டேன். இரவு முழுவதும் விழித்திருந்து மொபைல் போனில் ஏதாவது பார்த்துக் கொண்டிருப்பேன். அந்த நாட்களில் ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. என் பெற்றோர் 'ஜெபிக்கலாம் வாங்க' நிகழ்ச்சியைப் பார்ப்பார்கள். என்னையும் பார்க்க சொல்லுவார்கள். நானும் வேறு வழியில்லாமல் அந்த நேரத்தில்



சகோ. ஜோயல் தனது பெற்றோருடன்

என்னுடைய மொபைல் மற்றும் லேப்டாப்பை சார்ஜ் போட்டுவிட்டு எல்லோரோடும் இணைந்து அந்த நிகழ்ச்சியைப் பார்க்க ஆரம்பித்தேன். அப்போது ஜெப வேளையில் என் பெற்றோர் மட்டுமல்லாமல் எனது பாட்டி, தாத்தாவும் எனக்காக மிகுந்த பாரத்தோடு ஜெபிப்பார்கள். என்னுடைய பாவ வாழ்க்கையைக் குறித்து என் பெற்றோர் மிகவும் வருத்தப்படுவதைப் பார்த்தபின்பு தான், நான் எந்த நிலமையில் இருக்கிறேன் என்பதை யோசிக்க ஆரம்பித்தேன். ஏப்ரல் மாதம் ஒருநாள் ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியைப் பார்க்கும்போது, மோகன் அங்கிள், ''ஒரு கிறிஸ்தவன் எப்படி ஜெபிக்க வேண்டும்? முன்பு எப்படி ஜெபித்தீர்கள்? இப்பொழுது எப்படி ஜெபிக்கிறீர்கள்'' என்று ஜெபத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து பேசினது நேரடியாக என் இதயத்திற்குள் கடந்து சென்று என்னை யோசிக்க வைத்தது. அந்த நேரத்திலிருந்து ஜெபிக்க வேண்டுமென்ற ஒரு சிறிய ஆசை எனக்குள் உண்டானது. 'இயேசப்பா என்னை அதிகாலையில் எழுப்பி விடுங்க! எழும்பி ஜெபிக்க ஆசை இருக்கிறது, ஆனால் இதுவரைக்கும் அதிகாலையில் எழும்பி ஜெபித்தது இல்லை' என்று ஒரு சிறு ஜெபத்தை செய்துவிட்டு படுத்தேன். அதிகாலை 5 மணிக்கு இயேசு என்னை எழுப்பி விட்டார். நான் ஆர்வத்துடன் எழுந்து 25 நிமிடம்



சகோ. ஜோயல் தனது பாட்டி தாத்தாவுடன்

ஜெபம் செய்தேன். 5 நிமிடம் கூட தனியாக ஜெபிக்காத என்னை 25 நிமிடம் ஜெபிக்க வைத்தார். அந்த நாளில்தான் முழு இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டேன். 2020ஆம் ஆண்டு ஆண்டவர் கிருபையாய் என்னைத் தேடி வந்து தொட்டு இரட்சித்து அவருடைய அன்பை ஊற்றினார். ஆண்டவரை திரும்பத் தேடத் தேட எனக்குள் இருந்த பாவப் பழக்கங்களை மன்னித்து விடுதலை கொடுத்து அவருடைய பிள்ளையாக மாற்றினார்.

**சூப்பர்... இரட்சிக்கப்பட்ட பின்பு உங்களது வாழ்க்கை எப்படி இருந்தது? ஆண்டவருக்காக ஏதாவது செய்தீர்களா?**

ஆண்டவர் என்னை இரட்சித்தப் பின்பு என்னுடைய நண்பர்களோடு இணைந்து conference கால் மூலமாக 1 மணி நேரம், 2 மணி நேரம் தேசத்திற்காக ஜெபிக்க வைத்தார். நான் 12ஆம் வகுப்பு முடித்த



பின்பு கோவையில் உள்ள ஒரு கல்லூரியில் BSc. IT சேருவதற்கு உதவி செய்தார். கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் போது சுவிசேஷ பாரத்தைக் கொடுத்தார். 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிறிஸ்துமஸ் நாட்களாக இருந்ததால் எப்படியாவது சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற பாரத்தினால் பெரிய அனுபவம் ஏதும் இல்லாமல், முதலாவது கைப்பிரதி மற்றும் சாக்லேட் வாங்கி எனது 2, 3 நண்பர்களுடன் இணைந்து கோவையில் உள்ள ஒரு பகுதிக்கு சென்று happy Christmas என்று சொல்லி கொடுத்தோம். அது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. 2021ஆம் ஆண்டில் கர்த்தருக்காக இன்னும் அதிகமாக செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, நாலுமாவடியில் நடைபெற்ற Igniters campல் கலந்துகொண்டேன். தேவன் என்னை அங்கு அபிஷேகம் செய்து பெலப்படுத்தி அனுப்பினார். அதன் பிறகு கோவையில் உள்ள igniters teamமோடு

இணைந்து எங்கள் பட்டணத்தை எப்படியாவது தேவன் பக்கம் திருப்ப வேண்டுமென்று பிரயாசப்பட்டு 2023ஆம் ஆண்டு நாங்கள் ஜெபித்த போது, கோவை மாவட்டத்தில் உள்ள 11 தாலுக்காக்களுக்காக ஜெபிக்க தேவன் பாரப்படுத்தி, ஒவ்வொரு மாதமும் ஒரு தாலூக்காவிற்கு சென்று ஜெபித்தோம். 11 தாலூக்காக்களிலும் முழு இரவு ஜெபங்கள் நடத்த தேவன் உதவி செய்தார். தொடர்ந்து கோவை மாவட்டத்தின் எழுப்புதலுக்காகவும் வாலிபர்களின் இரட்சிப்பிற்காகவும் குழுவாக இணைந்து ஜெபித்தும் சுவிசேஷம் அறிவித்தும் வருகிறோம். கர்த்தர் அநேக இடங்களில் தம்முடைய நாம மகிமைக்காக என்னைப் பயன்படுத்தி வருகிறார்.

**சூப்பர்... கர்த்தர் யாரையும் பயன்படுத்த முடியும் என்பதை உங்கள் சாட்சியின் மூலமாக தெரிந்து கொண்டோம்... சரி... வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

5 நிமிடம் கூட ஜெபிக்கத் தெரியாத என்னைத் தேடிவந்து அவருடைய அன்பை எனக்கு வெளிப்படுத்தி, தரிசனமில்லாதிருந்த என்னை ஒரு பெரிய தரிசனத்தில் இணைத்து பயன்படுத்த முடியுமானால், இதை வாசிக்கிற யாராக இருந்தாலும், நீங்கள் உங்களைக் கர்த்தருக்கென்று முழுவதும் ஒப்புக்கொடுக்கும்போது, உங்களைக் கொண்டும் பெரிய காரியங்களைச் அவர் செய்ய வல்லமையுள்ளவராக இருக்கிறார்.

**அன்பான வாலிபர்களே! நீங்களும் ஒருவேளை சகோ. ஜோயல் போல் பல பாவப்பழக்கங்களுக்கு அடிமைப்பட்டு விடுவிப்பாரின்றி, மனதில் கர்த்தரிடம் நெருங்க வேண்டும் என்ற ஆசை இருந்தும் உங்கள் பாவங்களினால் அவரை நெருங்க முடியாமல் தவிக்கின்றீர்களா? இன்று முழுமையாக உங்களை ஆண்டவரிடம் அர்ப்பணித்து ஜெபித்து உங்கள் வழிகளை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். சகோ. ஜோயலை இரட்சித்து விடுவித்து தம்முடைய உன்னதமான பணிக்கு அழைத்து அநேகருக்கு ஆசீர்வாதமாக வைத்திருக்கிற ஆண்டவர் நிச்சயம் உங்களையும் உயர்த்துவார்.**






# இயேசு கிறிஸ்துவின் அன்பு எப்படிப்பட்டது?

நாம் நம்மையே நேசியாத போது, இந்த உலகத்தைப் படைத்த இயேசுகிறிஸ்துவின் அறிவுக் கெட்டாத அன்பு என்று எபேசியர் 3:19ல் வாசிக்கிறோம்.

எப்படியென்றால்,

- என்னை நேசித்த அன்பு (கலா. 2:20)
- தன்னையேத் தந்த அன்பு (எபே. 5:2)
- முழுமையான அன்பு (யோவா. 13:1)
- தகுதிப்படுத்திய அன்பு (வெளி 1:6)
- நெருக்கி ஏவுகின்ற அன்பு (2 கொரி. 5:14)
- பிரிக்கமாட்டாத அன்பு (ரோமர் 8:36)
- ஜெயங்கொடுக்கின்ற அன்பு (ரோமர் 8:37)



தகவல்: காட்வின்



TEC - 1

# கைப்பேசியை கையாளு!

**வாலிபர்கள் நவீன காலத்தில் டெக்னாலஜி மோகத்திற்கு அடிமையாகி வருகின்றனர். சிலர் அதை சரியாக பயன்படுத்தினாலும், அனேகர் அதில் சிக்கி வாழ்க்கையை இழந்து வருகின்றனர். இந்த டெக் கட்டுரை மூலம் டெக்னாலஜி வளர்ச்சி மற்றும் அதின் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெறுவது எப்படி? நாம் உபயோகப்படுத்தும் மொபைல் மூலமாகவே அந்த அடிமைத்தனத்தை மேற்கொள்வது எப்படி என்பதை ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து பார்க்கவிருக்கிறோம்.**




## இந்த மாதம் DIGITAL WELL BEING என்னும் செட்டிங்ஸ் அமைப்பைக் குறித்து பார்க்கலாம்.

மொபைல் போன் அதிகமாக பயன்படுத்துபவரா நீங்கள்? உங்களால் அதிலிருந்து வெளிவர முடியவில்லையா? இந்த செட்டிங்ஸ் உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

பொதுவாக நம் வாழ்க்கையில் அநேக காரியங்கள் தேவையுள்ளவையாக இருந்தாலும், சில காரியங்கள் அளவுக்கு மீறும்போது, அது நமக்கு தீங்காக அமைகிறது. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்று நம்மூரில் ஒரு பழமொழி சொல்வார்கள். அதேபோல் தான் இந்த மொபைல் ஃபோனின் பயன்பாடும். நமக்கு பயனுள்ள APPஆகவே இருந்தாலும், அதிக நேரம் செலவழித்தால் அது நமக்கு ஆபத்தாக மாறிவிடும்.

FACEBOOK ஆரம்பித்த காலத்தில் அநேகர் ''புதிய நண்பர் வட்டம் உருவாக்கப் போகிறேன்'' என அதில் நுழைந்து, நாளடைவில் முகம் தெரியாதவர்களிடம், தங்கள் இரகசியங்களைப் பகிர்ந்து அழிவுக்குள்ளானார்கள். ஆனால் தற்போது ஒரு சிலர்

FACEBOOK பக்கத்தை செய்திகள் படிப்பதற்காக பயன்படுத்துகிறேன் என்றும் அனுதினமும் என்னென்ன செய்திகள் வருகிறது, நாட்டு நடப்பு என்ன என்பதை பார்க்கவே பயன்படுத்துகிறேன் என சொல்லி நேரம் காலம் பார்க்காமல் தொடர்ச்சியாக 1 மணிநேரத்திற்கு மேலாக அதில் நேரத்தை செலவழிக்கிறார்கள்.

YOUTUBE பார்க்கும் பொழுதும் இதே கதை தான். டிக் டாக் என்னும் APP மூலமாக தன் திறமையை வெளிப்படுத்த முயற்சி செய்து அதில் நேரம் செலவழித்து வெற்றிபெற்ற இளம் தலைமுறையை விட தோல்வியால் மன அழுத்தத்திற்குள்ளானவர்கள் தான் அதிகம். சிறிது நேரம் RELAXATIONக்காக விளையாடுகிறேன் என்று சொல்லி, ஆன்லைன் விளையாட்டுகள் விளையாடி அதில் நேரத்தை தொலைத்ததோடு அதிக பணத்தையும் தொலைத்த வாலிபர்களின் எண்ணிக்கை தான் அதிகம்.


சரி, இவ்வளவு பிரச்சனைகளுக்கும் ஃபோன் பயன்படுத்துவது தான் காரணமா? என்றால் பிரச்சனை அதுவல்ல! அதை அதிகமாக பயன்படுத்துவது தான் பிரச்சனை. நேரம் பார்க்காமல் அதில் மூழ்கி விடுவதால் நம்மையே அறியாமல் பிசாசின் வலைக்குள் விழுந்து விடுகிறோம். அதற்கு ஒரு தீர்வு தான் இந்த DIGITAL WELL BEING என்னும் SETTINGS. இதன் மூலம் மொபைல் எவ்வளவு நேரம் உபயோகப்படுத்த








வேண்டும் என்பதை TIME செட் செய்து கொள்ளலாம். இதற்கென்று APP DOWNLOAD செய்ய தேவையில்லை. எல்லா மொபைல் போனிலும் SETTINGS என்ற OPTION இருக்கும். உங்கள் ஃபோனில் SETTINGS -> DIGITAL WELL BEING AND PARENTAL CONTROLS என்ற OPTIONல் ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் MOBILE PHONE பயன்படுத்தி உள்ளீர்கள் என்று பார்க்கலாம். அதில் உள்ள WEEKLY REPORT பார்த்தால் நீங்கள் ஒரு வாரத்தில், எவ்வளவு நேரம் எந்தெந்த APPக்கு எவ்வளவு நேரம் செலவழித்துள்ளீர்கள் என்பது தெரிய வரும்.




அதுபோல் SCREEN TIME GOALல் உங்கள் கைப்பேசி எவ்வளவு நேரம் மட்டும் உபயோகப்படுத்த விரும்புகிறீர்களோ, அவ்வளவு நேரம் மட்டும் SET செய்தால் போதும் நீங்கள் குறிப்பிட்ட அந்த நேரத்திற்கு மேல் உபயோகப்படுத்தும் போது உங்களை எச்சரிக்கும். அதற்கு கீழ் உள்ள APP TIMERSல் எந்த குறிப்பிட்ட APPஐ நீங்கள் குறைவாக உபயோகப்படுத்த நினைக்கிறீர்களோ, அந்த APPக்கு TIME SET செய்து கொள்ளலாம். அதன் பின் குறிப்பிட்ட நேரத்திற்கு அதிகமாக நீங்கள் உபயோகப்படுத்தும் போது அதுவே QUIT ஆகிவிடும். மறுபடியும் அடுத்தநாள் தான் நீங்கள் உபயோகப்படுத்த முடியும். இப்படி நீங்கள் உங்களுக்கு ஒரு கட்டுப்பாடு வைத்துக்கொள்ளும் போது நீங்கள் மொபைல் அடிமைத்தனத்திலிருந்து வெளியே வர முடியும்.

''எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்'' (1 கொரிந்தியர் 6:12) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது இந்த காலத்திற்கும் எப்படி ஒத்துப்போகிறது பாருங்கள்! கைப்பேசி பயன்படுத்த நமக்கு அதிகாரம் உண்டு, ஆனால் அதற்கு அடிமைப்படாமல் இருக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

***என்ன நண்பர்களே! இந்த தகவல் உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன். மீண்டும் அடுத்த மாதம் வேறு ஒரு வித்தியாசமான TECH தகவலுடன் உங்களை சந்திக்கிறேன்.***

Heart Beat

# அழகிய ஆரம்பம்; ஆனால்...

ஆலோசனை: அவி



நான் என் கல்லூரி படிப்பை முடித்து விட்டு IAS Coaching சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறேன். நான் ஒரு IAS officerஆக பொறுப்பேற்று, ஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் படித்து வருகிறேன். கடைசி முறை எழுதின தேர்வில் குறைந்த மதிப்பெண்களில் வெற்றி வாய்ப்பை தவற விட்டேன். இந்த ஆண்டு கடினமாக படித்து வெற்றி பெற முயற்சி செய்துக் கொண்டிருக்கிறேன். நானும் எனது தோழியும் இணைந்து படிக்க ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் மிகுந்த ஈடுபாடோடு ஆர்வமாக படித்து வந்தோம். நாளடைவில் எங்கள் கவனம் சற்று படிப்பை விட்டு விலகி Chatting, Social media, entertainment என்று மாறி விட்டது. சேர்ந்து படிப்பதைவிட கதை பேசுவதும், Online games என்று எங்களை அறியாமல் நேரத்தை வீணடிக்கிறோம். Coaching Centreல் வைத்த சில testகளில் failஆகி விட்டேன். ஆனாலும் எனக்கு அந்த நட்பு தான் முக்கியம் என்று தோன்றுகிறது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. IAS examக்கு நாட்கள் நெருங்கி கொண்டிருக்கிறது. ஒருவிதமான பயம் என்னை ஆட்கொள்கிறது. என்ன செய்வதென்று தெரியவில்லை. என் பெற்றோர் என் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த முறை நான் தேர்ச்சி பெறவில்லையென்றால், அவர்கள் மனம் உடைந்து போய் விடுவார்கள். நான் என்ன செய்வது? – **அருணா, திருச்சி.**

அன்பு சகோதரி அருணா, இந்த கடிதத்தின் மூலம் உங்களின் வேதனை நன்கு புரிகிறது. மேலும் தற்பொழுது ஏற்பட்டுள்ள பயம் உங்களை செயல்படவிடாமல் முடக்கி வைத்திருப்பதையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

அருணா, முதலாவது உங்களின் நோக்கத்தை நான் பாராட்டுகிறேன். எல்லோரும் படித்து, பணம், பெயர், புகழ் சம்பாதிக்க வேண்டும் என்று நினைக்கும் காலத்தில், ‘‘ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும், என் ஊர் ஜனங்களுக்கு சேவை செய்ய வேண்டும்’’ என்ற உங்களின் உயரிய எண்ணத்தைப் பாராட்டுகிறேன்.

அழகிய துவக்கம், ஆனால் தற்பொழுது படிப்பின் மீது இருக்கும் உங்கள் கவனத்தை சிதறச் செய்யும் காரியங்களுக்கு உங்களையே அறியாமல் இடம் கொடுத்து விட்டீர்கள். இப்படிப்பட்ட தடுமாற்றம் ஒருநாளும் வெற்றியைத் தர முடியாது.

நட்பு என்பது நல்லது தான். ஆனால் அந்த நட்பு உங்கள் இலக்கை அடைய உதவியாக இருக்க வேண்டுமேயன்றி, அதனை இழக்க காரணமாய் இருந்தால், அந்த நட்பை தொடர வேண்டுமா என்று நீங்கள் யோசிக்க வேண்டும்.

அருணா, இந்த நட்பு தற்பொழுது உங்கள் இலக்கை நோக்கிச் செல்ல விடாமல், திசைமாறவும், தடுமாறவும் செய்கின்றதை நீங்கள் உணர்ந்து அதிலிருந்து உங்களை விலக்கிக் கொண்டால் நலமாயிருக்கும்.

## நீங்கள் உங்கள் கனவான IAS என்ற வெற்றியின் இலக்கை அடைய கடைபிடிக்க வேண்டிய சில Tips:

"என் தோழியிடம் IAS Exam முடியும் வரை பேசுவதை நிறுத்துவேன்" என்று முடிவு செய்யுங்கள்.

இந்த முடிவை உங்கள் தோழியிடம் அவர்கள் புரிந்துக் கொள்ளும் வண்ணம் எடுத்துச் சொல்லுங்கள். இந்த நட்பு இரண்டு பேரின் கனவையும், எதிர்காலத்தையும் பாதிக்கும் என்று சொல்லுங்கள்.

மேலும் Social Mediaவை அதிகமாக பயன்படுத்த வேண்டாம். Mobile Usageயை குறைக்க முயலுங்கள்.

Coaching Centreல் முடிந்தால் நீங்கள் செல்லும் நேரத்தை மாற்றிக் கொண்டு, உங்கள் தோழி வராத நேரத்தில் செல்ல முயலுங்கள். முடியாவிட்டால் Coaching Centreயே மாற்றுங்கள்.

'எதற்காகவும் என் கனவை இழக்க மாட்டேன்' என்ற ஒரு உறுதியான தீர்மானத்தை எடுங்கள்.

IAS Prelims & Main exam வரைக்கும் உங்களை திசை திருப்பும் தேவையற்ற Appsஐ (Fb, Instagram, snapchat, games apps etc.,) உங்கள் போனில் இருந்து uninstall செய்வது நல்லது. (To Avoid distractions).

YouTube மற்றும் உங்களின் நேரத்தை அதிகம் திருடும் Appsகளுக்கு time செட் பண்ணி வையுங்கள்.

ஆரம்பத்தில் Time table போட்டு படித்தது போல் ஒவ்வொரு subjectக்கும் போதுமான Time கொடுத்து படிக்க முயலுங்கள்.

இப்படி நீங்கள் உங்கள் மனதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, மேற்கூறிய அனைத்தையும் செய்யும் போது வெற்றிக்கான வாய்ப்பு அதிகம் உண்டு.

### கடைபிடிக்க தவறுவதால் நேரிடும் இழப்புகள்:

நட்பு தான் முக்கியம் என்று முடிவு செய்து தோழியின் நட்பை தொடர்ந்தால், IAS கனவு வாழ்நாள் முழுவதும் ஒரு கனவாகவே தான் இருக்கும்.

அழகான ஆரம்பம், அவமானம் என்ற முடிவுக்கு கொண்டு போய்விடும்.

வெற்றி இலக்கை அடைந்து, கலெக்டராக வலம் வர வேண்டிய நீங்கள் ஒரு தோல்வியின் சின்னமாக திகழவும் வாய்ப்பு உண்டு.

உங்கள் குடும்பத்துக்கு உங்களால் ஒரு பெரிய ஏமாற்றமும், தலைகுனிவும் வரலாம்.

''என்னால் இப்படி ஒரு தீர்க்கமான தீர்மானம் எடுக்க முடியுமா? நான் விழுந்து விடுவேனா, தோல்வி அடைவேனே'' என்று சோர்ந்து போக வேண்டாம்.

அருணா, உங்களுக்கு உதவி செய்ய இயேசு என்ற நல்ல நண்பர் இருக்கிறார். அவரால் உங்களுக்கு எந்த சூழ்நிலையிலும் உதவி செய்ய முடியும். உங்கள் வீழ்ச்சியை மாற்ற அவரால் முடியும். நம்பிக்கையோடு இயேசுவே, எனக்கும் உதவி செய்யுங்கள் என்று வேண்டிப் பாருங்கள், அவர் உங்களுக்கு ஓர் வெற்றியைக் கொடுத்து உங்களை உயர்த்த முடியும்! **"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (ஏசா 41:10)** என்ற வேத வசனத்தின்படி கர்த்தர் உங்களை பலப்படுத்தி உங்கள் இலக்கை அடைய உதவி செய்வார்.

சாதனை: சுமா

# வெற்றிக் கொடியை நாட்ட போராடு!




**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! நாம் நம்முடைய வாழ்க்கையில் எடுக்கும் ஒவ்வொரு சிறிய முயற்சிக்கும் பின்பாக பெரிய வெற்றி மறைந்துள்ளது. நாம் செய்யும் மிகப்பெரிய தவறு என்னவென்றால், நமக்கு முன்பாக இருக்கும் போராட்டத்தைப் பார்த்து பின்வாங்கிப் போவது தான். போராட்டம் அல்லது தோல்விக்குப் பின்னால் இருக்கும் வெற்றியை நோக்கி முன்னேறி செல்வோமாகில், போராட்டம் ஒன்றுமில்லாமல் சென்றுவிடும். அப்படி வெற்றியை நோக்கிப் பயணித்த சகோதரர்களின் சாதனை வெற்றி பயணம் உங்களுக்காக...**



ஜி.பி சுந்தரராஜன் மற்றும் சௌந்தரராஜன் இருவரும் அதிகம் படிக்காதவர்கள். இருவரும் பள்ளிப் படிப்பை மட்டுமே முடித்திருந்தனர். அவர்கள் குடும்பத்திற்கென்று சொந்தமாக நிலம் இருந்ததால் இருவரும் அந்த நிலத்தில் காய்கறிகளைப் பயிரிட்டனர். ஆனால் சிறிய இலாபம் கூட இவர்களுக்கு கிடைக்கவில்லை. இலாபம் இல்லாததால் வாங்கின கடன் அதிகரிக்கத் தொடங்கியது. அதனால் வேறு நிறுவனத்திற்கு வேலைக்குச் சென்றனர். ஆனால் இவர்களுக்கு சொந்த தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆசை இருந்ததால் சகோதரர்கள் இணைந்து சுகுணா ஃபுட்ஸ் பிரைவெட் லிட், என்ற நிறுவனத்தை 1984ம் ஆண்டு வெறும் 5000 ரூபாய் முதலீட்டில் சிறியதாக தொடங்கினர். கோழிப் பண்ணை வர்த்தகத்தில் ஈடுபட்டனர்.

இதிலும் அதிக வருமானம் ஈட்டுவதில் மிகவும் கஷ்டப்பட்டனர். இந்த நேரத்தில் தான் ஒப்பந்த முறையில் கோழி வளர்ப்புப் பற்றி சிந்திக்கத் தொடங்கினர். 1990ல் மூன்று பண்ணைகளுடன் இணைந்து ஒப்பந்த அடிப்படையில் கோழிப் பண்ணையைத் துவங்கினர். இந்த முயற்சியைப் பார்த்த எல்லாரும் நீங்கள் எப்போதும் வெற்றி அடையப்போவதில்லை என்று ஏளனம் செய்தனர். மற்றவர்கள் செய்த ஏளனத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதை சவாலாக எடுத்துக்கொண்டு ஒப்பந்தப் பண்ணை மாதிரியை தரப்படுத்த, ‘‘கோழி

ஒருங்கிணைப்பு'' என்ற யோசனையைக் கொண்டுவந்தார்கள். கோழி வளர்ப்புக்குத் தேவையான தீவனம், தடுப்பூசிகள், மருந்துகள், முன்கலவை மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் பல்வேறு நிறுவனங்களைக் கொண்டு தயாரித்து, சுகுணா குழுமம் என்ற ஒரே அமைப்பின் கீழ் கிடைக்கப்பெற செய்தது. இந்த வழியில் சுகுணா உயர்தர விவசாயப் பொருட்களுக்கு ஒரு அளவுகோலை அமைத்தது. எல்லாரும் வியக்கும் வகையில் சில ஆண்டுகளில் ரூபாய் 7 கோடி முதல் (வருவாய்) ஈட்டினர். தொடர்ந்து நாடு முழுவதும் 66 தீவன ஆலைகளைத் தொடங்கினர்.

இந்த வளர்ச்சியைக் கண்டு இதோடு நிறுத்திவிடாமல், நிறுவனத்தை விரிவாக்க முயன்றனர். இந்தியாவில் மட்டுமின்றி சில நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யத் தொடங்கினர். இன்று, ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய பசிபிக் நாடுகளில் உள்ள நான்கு நாடுகளில் 8,000க்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். 40,000க்கும் மேற்பட்ட விவசாயிகளின் நிலையான வாழ்வாதாரத்திற்கு சுகுணா ஃபுட்ஸ் காரணமாக உள்ளது. 80க்கும் மேலான குஞ்சு



பொரிப்பகங்கள், 60க்கும் மேலான தீவன ஆலைகள், அதிநவீன தடுப்பூசிகள் மற்றும் முன்கலவை உற்பத்தி நிறுவனங்களுடன், சுகுணா குழுமம் ஒரு வலிமையான கருவேல மரமாக வளர்ந்துள்ளது. 5 ஆயிரம் ரூபாயில் துவங்கப்பட்ட இந்த நிறுவனம் இன்று கோடிக் கணக்கில் வருமானம் ஈட்டி வருகின்றது.

**இதை வாசிக்கும் வருங்கால சாதனையாளர்களே! சுகுணா ஃபுட்ஸ் நிறுவனம் குறுகிய காலத்தில் முன்னேறியது போல் தோன்றலாம். ஆனால் ஒவ்வொரு நிலையிலும்அவர்களின் சாதனை என்கிற கொடியை நாட்ட பலப் போராட்டங்களை எதிர்கொண்டு இருக்கின்றார்கள். வாழ்க்கை முழுவதும் போராட்டமாக இருக்கப் போவதில்லை. ஆனால் போராட்டங்கள் வரும்பொழுது அவற்றை துணிவுடன் எதிர்கொள்ளும் போது நிச்சயம் வெற்றி நம்மை சேரும்!**

# தேர்வுக்கு தயாராவது எப்படி?





தேர்வுக்கு தாயாராகுபவர்கள் பதட்டத்தை தவிர்க்கவும். பதட்டத்தில் படித்தவற்றை மறக்க செய்யும்.

கேள்வி தாளில் ஒரு கேள்விக்கே பல விதமான பதில்கள் இருக்கும். அதனால் கேள்விகளை படிக்கும்போது புரிந்து படிக்க வேண்டும்.



எந்த பாடம் கடினமாக இருக்கிறதோ அதற்கு அதிகம் நேரம் செலவிட வேண்டாம். ஏனென்றால் அதனை மட்டும் அதிகம் நேரம் படித்து, மற்ற பாடங்களை படிக்க நேரம் இருக்காது. கால அட்டவணை போட்டு படியுங்கள்.

கடைசி நேரத்தில் படிக்கும் மாணவர்கள் எல்லாவற்றையும் படிக்காமல், முக்கியமான கேள்வி பதில்களை படித்தாலே வெற்றி பெறலாம்.




தேர்வு எழுதும் குழந்தைகளுக்கு உணவு மிகவும் முக்கியம். சாப்பிடாமல் ஒழுங்காக தேர்வை எழுத முடியாது. எனவே 2 இட்லி அல்லது ஒரு டம்ளர் பால் குடித்து செல்லலாம்.

உணவு எவ்வளவு முக்கியமோ அதே போல் தூக்கமும் முக்கியம். நன்றாக தூங்கினால் மட்டுமே கவனம் முழுவதும் படிப்பில் இருக்கும்.

# இயேசுவின் அன்பு ஆச்சரியமான அன்பு!





செய்தி: மோகன் சி. லாசரஸ்

"அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்துபோகையில், ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்" (லூக்கா 19:1-4).

இயேசு எரிகோ என்கிற ஒரு பட்டணத்திற்கு வரும்போது ஆயக்காரருக்கு தலைவனாக (chief tax collector) இருந்த சகேயு என்கிற ஒரு மனிதன் பெரிய செல்வந்தனாக இருந்தும் மனதில் சமாதானமில்லாமல் மிகவும் வெறுமையுடன் இருந்தான். அந்த சூழ்நிலையில் இயேசு அந்த பட்டணத்தின் வழியாக கடந்து போகிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க வேண்டுமென்று ஆவலோடு வந்தான். இயேசுவைப் பார்ப்பதற்கு சுற்றிலும் திரள் கூட்ட மக்கள் நெருக்கியடித்துக் கொண்டிருந்தார்கள். சகேயு மிகவும் குள்ளமான மனிதனாக இருந்தபடியால், ஜனக்கூட்டத்திற்குள் நுழைந்து இவரால் இயேசுவைப் பார்க்க முடியவில்லை. இயேசுவை எப்படியாகிலும் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலில் ஓடிச்சென்று ஒரு காட்டத்தி மரத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டான். தன்னைப் பார்க்க ஒரு மனிதன் ஆவலோடு கூட மரத்தில் ஏறி காத்திருக்கிறான் என்பதை அறிந்த இயேசு அண்ணார்ந்து பார்த்து, ''சகேயுவே சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு உன் வீட்டிலே நான் தங்க வேண்டும்'' என்று சொன்னார். அதை சற்றும் நம்ப முடியாத சகேயு அளவில்லாத மகிழ்ச்சியோடு அந்த மரத்தில் இருந்து இறங்கி வந்து, இயேசுவை தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு சென்றான்.

அப்பொழுது அந்த பட்டணத்தின் மக்கள் அனைவரும் ''இவன் பாவியான மனிதன், அநியாயமாய் சம்பாதிக்கிறவன், லஞ்சம் வாங்குகிறவன், இவன் அரசாங்கத்தில் அதிகாரியாக இருந்து மக்களை ஏமாற்றி, வரிசூலிப்பதிலே லஞ்சம் வாங்கி ஏமாற்றுகிறவன், அடுத்தவர்களுடைய சொத்துக்களை அபகரித்துக் கொள்கிறவன்'' என்று அவனை அற்பமாய் பேசினர். அவனுடைய பாவத்தின் நிமித்தம் அவனை வெறுத்தார்கள். அவனுக்கு அன்புகாட்ட யாருமில்லை. எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டவனாக காணப்பட்டான். அவனை நேசிப்பதற்கு யாரும் இல்லாததால் அவனுக்குள் ஒரு வெறுமை காணப்பட்டது.

அப்போது தான் இயேசு அவனை சந்தித்து, ''சகேயுவே, யார் உன்னை நேசிக்காவிட்டால் என்ன? நான் உன்னை நேசிக்கிறேன். யார் உன் வீட்டுக்கு வராவிட்டால் என்ன? நான் வருகிறேன்'' என்று சொன்னபோது அவனுடைய உள்ளம் ஆச்சரியப்பட்டு மகிழ்ச்சியடைந்தது. காயப்பட்ட உள்ளத்திற்கு ஒரு ஆறுதல் உண்டானது. இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்க்க சென்ற அவன், அவர் மிகுந்த அன்புள்ளவர்; பாவிகளைக்கூட நேசிக்கிற ஒரு அன்பான ஆண்டவர் என்பதை அறிந்து கொண்டான்.



மத்தேயு 15:32ம் வசனத்தில், ஜனங்கள் மூன்று நாட்களாய், சாப்பாட்டை மறந்து, தூக்கத்தை மறந்து இயேசுவினுடைய பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஆண்டவர் தம்முடைய சீஷர்களை

நோக்கி, ''மூன்று நாட்களாக இவர்கள் சாப்பிடாமல் என் சமுகத்தில் உட்கார்ந்து வசனத்தைக் கேட்க காத்திருக்கிறார்கள், இவர்களைப் பட்டினியாய் அனுப்பக் கூடாது, திரும்பி செல்லும் வழியில் சோர்ந்து போவார்களே; இவர்களுக்கு ஒரு அற்புதம் செய்ய வேண்டும்'' என்று ஆண்டவர் ஐந்து அப்பம் இரண்டு மீனை அசீர்வதித்து பெருகப் பண்ணி திருப்தியாக சாப்பாடு கொடுத்து ஜனங்களை மகிழ்ச்சியோடு அனுப்புகிறார்.

இயேசு இந்த அற்புதத்தை செய்ய காரணம் என்ன? ''என் வல்லமையை ஜனங்கள் பார்க்கட்டும்'' என்று பெருமைபாராட்டி இந்த அற்புதத்தை செய்யவில்லை. ''ஜனங்கள் சோர்ந்து போவார்களே, கஷ்டத்தில் இருக்கிறார்களே, தேவையில் இருக்கிறார்களே'' என்ற மனதுருக்கத்தினால், அன்பினால் தான் அற்புதம் செய்தார். அவர் அன்பான ஒரு ஆண்டவர். அந்த அன்பை வெளிப்படுத்த தான் இந்த உலகில் மனிதனாக வந்து, மனிதர்கள் மத்தியில் அன்புள்ள ஆண்டவராக உலாவிக் கொண்டிருந்தார்.



மத்தேயு 9:10ம் வசனத்தில், இயேசு மத்தேயுவின் வீட்டில் உணவு அருந்திக் கொண்டிருந்தபோது, ஆயக்காரர் என்னப்பட்ட வரி வசூலிப்பவர்களும் பாவிகளும் பலர் வந்து அவரோடும் அவருடைய சீடர்களோடும் சாப்பிட்டார்கள். இதைக் கண்ட, கடவுளுக்கு அருகில் இருக்கிறவர்கள் தாங்கள் தான் என்று எண்ணிக் கொண்டிருந்த வேதபாரகரும் பரிசேயரும், அவருடைய சீஷர்களிடம், ''உங்கள் போதகர் வரி வசூலிப்பவர்களுடனும் பாவிகளுடனும் சாப்பிடுவது ஏன்?'' என்று கோபத்துடன் கேட்டார்கள். சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட பாவிகள், தாழ்ந்த ஜாதிகள் என்று ஒதுக்கப்பட்டவர்களோடு இயேசு எப்படி உட்கார்ந்திருக்க முடியும்? என்று இயேசுவைக் குற்றப்படுத்தினார்கள்.

இதைக் கேட்ட இயேசு, ''ஆரோக்கியமானவர்களுக்கல்ல, நோயாளிகளுக்கே மருத்துவர் தேவை. அதுபோல நீதிமான்களுக்காக அல்ல, பாவிகளை இரட்சிக்கவே நான் இந்த பூமிக்கு வந்தேன்'' என்று கூறினார். மத். 11:19ம் வசனத்தில், அவர் பாவிகளின் சிநேகிதன் என்பதாக வேதம் சொல்கிறது. இந்த சமுதாயத்தால் பாவிகள் என்றும், தாழ்ந்த ஜாதி என்றும் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு இயேசு சிநேகிதராக இருந்தார்.

இயேசு செய்த கடைசி அற்புதம் என்ன தெரியுமா? கெத்செமனே தோட்டத்தில், அவர் மீது பொறாமைக் கொண்ட மத தலைவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றுவிட வேண்டுமென்று இரவோடு இரவாக அவரை கைது செய்ய வந்தபோது, இயேசுவின் சீஷனாகிய பேதுரு கோபம் கொண்டு பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுடைய காதை வாள் கொண்டு வெட்டினான். அவனுடைய காது துண்டாக கீழே விழுந்து காதிலிருந்து இரத்தம் வடிந்தது. இயேசு அந்த காதை எடுத்து ஒட்ட வைத்து தன்னை விரோதித்த, தன்னை கைது செய்ய வந்த அந்த வேலைக்காரனுக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்து தம்முடைய தெய்வீக அன்பை வெளிப்படுத்தினார்.

மத். 26:50ம் வசனத்தில், இயேசுவோடு கூடவே இருந்து அவரை வஞ்சித்து பணத்திற்காக அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசைப் பார்த்து சிநேகிதனே என்றழைத்தார். அவனைக்கூட ஒரு சத்துருவாக நினைக்கவில்லை. அவ்வளவு அன்புள்ளவர் இயேசு.

நான் சென்னையில் படித்துக் கொண்டிருந்த நாட்களில் இயேசுவைப் பற்றி சொல்கிற கிறிஸ்தவர்கள் முட்டாள்கள், தவறான ஒரு தெய்வத்தை பரப்புகிறார்கள் என்று கேவலமாய் பேசினவன் நான். இயேசுவைப் பற்றி எனக்கு சொல்ல வந்தவர்களைப் பல கேள்விகளைக் கேட்டு கேவலமாய் பரிகாசம் பண்ணி அனுப்பினவன். அவ்வளவாய் நான் இயேசுவை வெறுத்தேன். ஆனால் 14 வயதில் இருதயம் வீங்கி நொண்டியாக நடக்க முடியாமல், மூச்சுவிட முடியாமல், பேச முடியாமல், சாப்பிட முடியாமல், தண்ணீர் குடிக்க முடியாமல், மரணப் படுக்கையில் சாகக் கிடந்த என்னை எல்லாரும் கைவிட்ட நேரத்தில், நான் வெறுத்த இயேசு தான் என்னை தேடி வந்து குணமாக்கி அற்புதம் செய்தார். நான் வெறுத்து கேவலமாக பேசின இயேசுவின் ஒரு தொடுதல், என் மரணப்படுக்கையை மாற்றி நொண்டியாக கிடந்த என்னை நடக்கப் பண்ணியது. வீங்கியிருந்த என் இருதயம் நார்மலாக மாறியது. இன்றைக்கு நான் சுகத்தோடு இருக்கக் காரணம் இயேசுவினுடைய அன்பு. என்னால் அந்த அன்பை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

**எனக்கன்பான வாலிபர்களே! இவ்வுலகில் ஆச்சரியமான ஒரு அன்பு இருக்குமென்றால் அது இயேசுவினுடைய அன்பு மட்டும் தான். அவர் நம்மை நேசிக்கிற ஒரு நல்ல ஆண்டவர். நமக்கு அற்புதம் செய்ய விரும்புகிறவர். நீங்கள் அவரை விசுவாசித்தால் போதும். இயேசுவை நினைத்தாலே உள்ளத்தில் ஒரு சந்தோஷம் உண்டாகும். அவர் இனிமையானவர், அன்பானவர், அருமையானவர். இயேசு என்கிற நாமத்தை உச்சரிக்கும் போதே அவ்வளவு பெரிய சந்தோஷம் நம் மனதில் உண்டாகும். நமக்காக மரித்து உயிர்தெழுந்தவர். அவரை சொந்தமாக்கிப் பாருங்கள், ருசித்துப் பாருங்கள், அளவில்லா சந்தோஷம் உங்கள் மனதில் உண்டாகும்!**

வேதாகம கதாபாத்திரம்: சுமா

# சிப்பிக்குள் முத்து

பரிசுத்த வேதாகமத்தில் அநேக தேவ மனிதர்களைப் பற்றி நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால், நாம் அறியாத தேவ மனிதர்களும் உண்டு. அவர்களைப் பற்றி ‘சிப்பிக்குள் முத்து’ என்ற இந்த தொடரில் பார்ப்போம்.





எப்பாப்பிரோத்து (Epaphroditus) இவரைப் பற்றி நாம் பரிசுத்த வேதாகமத்தில் அநேக இடங்களில் பார்க்க முடியாது. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின பிலிப்பியர் நிருபத்தில் 2:25-30 வரைக்குமுள்ள ஆறு வசனங்களில் மட்டுமே இவரைப் பற்றிப் பார்க்க முடிகிறது. கிரேக்க பெண் தேவதையின் பெயரின் அடிப்படையில் இவருக்கு எப்பாப்பிரோதீத்து என்றுப் பெயரிடப்பட்டுள்ளது. இவர் அப்போஸ்தலனாகிய பவுலின் பிரசங்கம் மூலம் இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்க வேண்டும் என்று வேத அறிஞர்கள் கூறுகின்றனர்.

பவுல் ரோமாபுரியில் சிறையில் இருக்கும் போது பிலிப்பியர் நிருபம் எழுதப்பட்டது. பவுலின் குறைவை நீக்கும்படி பிலிப்பி பட்டணத்து ஜனங்கள் கொடுக்கும் காணிக்கையை எப்பாப்பிரோதீத்து 800 மைல் தூரம் நடந்து வந்து பவுலிடம் கொடுத்தார். சரியான தூக்கம் மற்றும் உணவு இல்லாமல் நீண்ட மைல் தூரம் பிரயாணம் பண்ணினதால் சரீரத்தில் மிகவும் வியாதிப்பட்டு மரணத்திற்கு சமீபமாய் இருந்தார் என்று பவுல் பலிப்பியர் 2:26,27,30 வசனங்களில் எழுதியிருக்கிறார்.

இப்படிக் கடினமாக பிரயாணப்பட்டு வந்த எப்பாப்பிரோதீத்துவைப் பற்றி பவுல் எழுதும்போது, இவன் உங்களால் அனுப்பப்பட்ட ஸ்தானாபதி மாத்திரமல்ல, என்னுடைய சகோதரனும், உடன் வேலையாளும், உடன்சேவகனும் மட்டுமல்லாமல் என் குறைச்சலில் எனக்கு உதவி செய்த தேவ மனிதர் என்று சாட்சி கூறுகின்றார். தனக்கு கொடுக்கப்பட்ட ஊழியம் சிறியது என்ற போதும் அதை உண்மையாக செய்தவர் எப்பாப்பிரோதீத்து. கிறிஸ்துவின் ஊழியத்தின் நிமித்தம் தனக்கு மரணமே வந்தாலும் கொடுக்கப்பட்ட ஊழியத்தை உத்தமமாய் செய்து முடித்தார்.

நீங்கள் செய்யும் உதவி யாருக்கும் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எப்பாப்பிரோதீத்துவைப் போல உண்மையாய் கிறிஸ்துவுக்காக செய்யுங்கள். எப்பாப்பிரோதீத்து குருவுக்கு பெருமை தருகிற சீஷனாக இருந்துள்ளார். இவர் எந்த இடத்திலும் பிரசங்கம் பண்ணினதாக வேதாகமம் கூறவில்லை. இவரை அன்று அநேகருக்கு தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் இன்று அவரின் உண்மையான அன்பு மற்றும் ஊழியத்தை அநேகர் பேசும்படியாக கர்த்தர் வைத்திருக்கிறார்.

இதை வாசிக்கும் வாலிபர்களே, எப்பாப்பிரோதீத்துவைப் பற்றி வேதாகமத்தில் பெரிதாக வசனங்கள் இல்லை. ஆனால் உண்மையுள்ள ஊழியனாக தேவனுக்கும் தன் குருவுக்கும் பிரியமானவனாக இருந்தார். அதுபோல நமக்கு கொடுக்கப்படுகிற சிறிய பொறுப்பாக இருந்தாலும், பெரிய பொறுப்பாக இருந்தாலும், அதில் எப்பாப்பிரோதீத்து போல் உண்மையாய் இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார்.

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

**வேதத்திலிருந்து அன்பைக் குறித்தக் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அதற்குரிய விடைகள் அருகே கொடுக்கப்பட்டுள்ள Heart-ல் உள்ள எழுத்துக்களில் மறைந்துள்ளது. அவற்றைக் கண்டறிந்து வட்டமிட்டு, வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

## வினாக்கள்

1. கர்த்தர் எவனிடத்தில் அன்புக்கூருகிறாரோ அவனை என்ன செய்கிறார்?
2. யாரிடத்தில் தேவ அன்பு இல்லையென்று இயேசு கூறினார்?
3. கர்த்தரிடத்தில் அன்புக்கூர்ந்து, தன் தகப்பனின் கட்டளைகளில் நடந்தது யார்?
4. எது திரளான பாவங்களை மூடும்?
5. அன்பு எதின் நிறைவேறுதலாயிருக்கிறது?
6. நாம் எப்படி நடப்பதே அன்பு?
7. எது மிகுதியாவதினால் அன்பு தணிந்துப்போம்?
8. யாருக்காக ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு இல்லை?
9. கிறிஸ்துவின் அன்பு எங்களை ---------- ஏவுகிறது.
10. ----------- சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | க | ப | கி | | | | லை | தே | சி | | |
| | ஞ | சி | ஒ | கு | ஞ | | டே | கு | க | ட் | ஆ | |
| டி | ங | நே | கை | டி | சா | நி | ந் | பை | ற் | சி | ல | கா |
| ஒ | சி | கி | ஞ | லொ | யூ | யா | தே | வ | ப | க் | தி | வ |
| | ப | த | மோ | ஆ | த | ய | வு | த | னை | கி | வ | |
| | அ | ன் | பு | யூ | ர் | ப் | ர | ர் | தே | றா | ங | |
| | | க் | ர் | கி | க | பி | ற் | ஒ | ஆ | ர் | | |
| | | கை | கி | வ | ள் | ர | நெ | ரு | க் | கி | | |
| | | | ரு | ர | யூ | மா | ரி | ப | ள் | | | |
| | | | | ம் | ம | ண | க | பை | | | | |
| | | | | | க | ம் | ஷ | | | | | |
| | | | | | | ரி | | | | | | |

BIBLE Treasure Hunt

## கடந்த மாத வெற்றியாளர்:

சகோதரி விக்டர் (சென்னை)

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.02.2024**

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

## கடந்த மாத விடைகள்

1. சிவப்பான கூழ் (ஆதி. 25:30)
2. பச்சை (எரே. 11:16)
3. கருப்பு (வெளி. 6:5)
4. சிவப்பு (வெளி. 17:3)
5. சிவப்பு (மாற்கு 15:17)
6. வெண்மை (தானி. 7:9)
7. சிவப்பு (ஏசாயா 1:18)
8. மங்கின நிறம் (வெளி. 6:8)
9. பளிங்குப் போல் (வெளி. 22:1)
10. இளநீல நூல் (யாத். 28:31)


அலசல்: ரெபேக்கா டேவிட்

# உணர்வுகள்!

## தனிமை

அன்பான வாலிபர்களே, இந்த புதிய வருடத்தில் உணர்வுகள் என்ற புதிய கட்டுரை மூலம் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நாம் வாழும் இந்த நவீன உலகில் இக்கால வாலிபர்கள் தங்களுடைய உணர்வுகளை (emotions) சரியாக கையாள முடியாததால் அநேக பிரச்சனைகளை சந்திக்கின்றனர். எனவே வரும் நாட்களில் ஒவ்வொரு மாதமும் ஒரு உணர்வைப் பற்றி அறிந்து கொண்டு அதனை எப்படி கையாள வேண்டும் என்றும் தெரிந்து கொள்ளப்போகிறீர்கள். இந்த மாதம் தனிமை உணர்வைப் பற்றி சில காரியங்களைப் பார்க்கலாம்.

உலகின் மிகக் கொடுமையான விஷயம் தனிமை என்று ஆய்வுகள் கூறுகின்றன. தனிமை என்பது யாருக்கும் தானே வருவதில்லை. ஒன்று நம்மை நாமே தனிமைப்படுத்தி கொண்டிருப்போம் அல்லது மற்றவர்களால் தனிமைப்படுத்தப்பட்டிருப்போம். சுமார் 4.5 மில்லியன் மக்கள் "மிகவும் தனிமையாக" உணர்வதாக உலக சுகாதார அமைப்பு ஓர் அறிக்கையில் கூறுகிறது. சிலருக்கு சமூக வலைத்தளங்களில், குடும்பங்களில், எவ்வளவு நண்பர்கள் இருந்தாலும், வாழ்க்கையில் தங்களுக்கு எல்லாம் இருந்தாலும் தனிமையை உணர்வார்கள். மனிதன் எப்பொழுதெல்லாம் தனிமையை உணர்கிறான்? அதினால் ஏற்படும் விளைவுகள் மற்றும் தீர்வுகளைப் பற்றி காண்போம்.





### தனிமையை உணரும் தருணங்கள்.

- எல்லோரும் அல்லது நம்மை நேசிப்பவர் வெறுத்து ஒதுக்கும்போது.
- நாம் யாருக்கும் தேவையில்லை அல்லது பிரயோஜனமில்லை என்கிற நேரத்தில்.
- சிலருக்கு யாரும் அருகில் இல்லாதபோது தனிமை உணர்வு ஏற்படுகிறது.
- நம் உணர்வுகள், எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள யாரும் இல்லாத போது.
- நீண்ட நாட்கள் வேலை இல்லாமல் அல்லது திருமணம் நடைபெறாமல் இருக்கும் போது.
- காதல் தோல்வி, வாழ்க்கை துணையை இழந்தவர்கள் தனிமையை உணர்கின்றனர்.

### தனிமையினால், ஏற்படும் விளைவுகள்...

- தனிமைப்படுத்தப் படுகிறவர்களின் உடலில் ஆரோக்கிய பிரச்சனைகள் அதிகம் ஏற்படுகிறது.

- உடல் பருமனால் ஏற்படும் இறப்பு எண்ணிக்கையை விட தனிமை உணர்வால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது.
- வெளிச்சமோ, சத்தமோ இல்லாத அறையில் தனிமையில் 72 மணி நேரம் இருந்தால் மாயத்தோற்றம் **(Hallucination)** போன்ற மனச்சிதைவு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.
- ஒருவர் தனிமையில் அதிகம் இருந்தால் அது அவருடைய தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்கையை பாதிக்கிறது.
- தனிமையினால் தலைவலி, டென்ஷன், வெறுப்பு மற்றும் மன அழுத்தம் போன்றவை ஏற்படும்.
- நீண்ட கால தனிமையின் தாக்கம் தற்கொலை செய்ய தூண்டும்.



## தனிமையிலிருந்து விடுபடத் தீர்வுகள்...


- இயற்கையோடு நேரம் செலவிடுதல், செல்லப் பிராணிகளோடு விளையாடுவது, நம்பிக்கைக்குரியவர்களிடம் மனம் விட்டு பேசுவது, ஓவியம் வரைவது, இசையை ரசிப்பது, புத்தகம் வாசிப்பது, எழுதுவது, பிடித்த உணவை செய்து சாப்பிடுவது, வீட்டை சுத்தமாக்குவது, நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரோடு நேரம் செலவிடுவது போன்ற செயல்கள் தனிமையை தவிர்க்க உதவும்.
- தனியாக இருப்பதை தவிர்த்து மேற்கூறிய காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக்கொண்டு Busyயாக வைத்துக்கொள்ளும்போது தனிமை உணர்வு இல்லாமல் பார்த்துக்கொள்ளலாம்.

## வேதத்தின் அடிப்படையில் தனிமைக்கு தீர்வு:

தனிமை என்பது நமது சிந்தையில் வரும் எண்ணம் தான். வேதத்தில் தாவீதும் அநேக நேரம் தனிமையை உணர்ந்து என்ன செய்வது என்று தெரியாமல் அழுதிருக்கிறார் (சங். 25:16). அப்பொழுதெல்லாம் தாவீது தன்னை கர்த்தருக்குள் திடப்படுத்திக் கொண்டார் (1 சாமு. 30:6). அதினால் அவர் சகலவற்றையும் பெற்றுக் கொண்டார் என்று 1 சாமு. 30இல் வாசிக்கின்றோம். தேவனோடுள்ள நம் உறவில் அதாவது வேதம் வாசிப்பதில் ஜெபிப்பதில் சரியாக இருக்கும்போது பரிசுத்த ஆவியானவர் எப்போதும் நம்மோடிருந்து நம்மை பலப்படுத்தி தேற்றி தனிமை நம்மை பாதிக்காதபடி பாதுகாப்பார். ஆகையால் தேவனோடு உள்ள உறவை இந்த 2024ஆம் ஆண்டு புதுப்பித்துக் கொள்ளுங்கள். தேவன் உங்களுக்கு உற்ற நண்பராய், துணையாய், வழிகாட்டியாய் இருந்து நடத்துவார். நிச்சயம் தனிமை உணர்விலிருந்து விடுதலை பெற முடியும்!

– அடுத்த மாதம் மற்றொரு உணர்வுகள் பகுதியில் சந்திக்கலாம்...

# தனித்திரேன்... Alone...



இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார். யோவான் 16:32

இயேசு உலகில் வாழ்ந்த போது தாமே தனிமையை நாடிச் சென்று ஜெபத்தில் தன் நேரத்தை செலவிட்டு தன் பிதாவின் பிரசன்னத்தை பெற்று வல்லமையோடு தேவ சித்தத்தை நிறைவேற்றினார்.

சுவிசேஷ பயணம் ஜெனிபர்

# வீரமுள்ள தீமோத்தேயு



மிடுக்கான உடையையும் பகட்டான வாழ்வையும் தவிர்த்து
எதற்கும் அஞ்சா நெஞ்சமுடையவராய்,
உயிர் கொடுத்த நேசருக்காய் எதையாகிலும் செய்ய
இரத்தம் துடிதுடிக்க ஊக்கமுடன்
தீயைப்போல செயல்பட்ட அந்த வீரமுள்ள
வாலிபன் யாரோ?
அவர் தாங்க நம்ம தீமோத்தேயு.
இவர் கி.பி.17 ம் நூற்றாண்டில் பிறந்தார்.
இவர் தற்போதைய துருக்கியில் உள்ள
லீஸ்திரா நாட்டைச் சார்ந்தவர்.
இவருடைய பெயரே ஒரு Special
தாங்க. அப்படி என்ன ஸ்பெஷல்னு
கேக்குறீங்களா?வாங்க சொல்றேன்.

**இந்த எழுப்புதல் காலத்தில் தேவனுக்காக ஒரு புதிய சகாப்தத்தை படைக்க தெரிந்து கொள்ளப்பட்டிருக்கும் எனது அன்பார்ந்த வாலிப சகோதர சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!**

**ஹலோ Friends, எல்லாரும் எப்படி இருக்கீங்க?**

இந்த புது வருடத்தை சூப்பரா celebrate பண்ணியிருப்பீங்க, நிறைய தீர்மானம் எடுத்திருப்பீங்க, அந்த தீர்மானங்களை இந்த ஒரு மாதம் கடைப்பிடிப்பதே கொஞ்சம் struggleஆ இருந்திருக்கும். ஆனால் ஒரு வீரமுள்ள வாலிபன் தன்னுடைய சிறுவயதிலேயே இயேசுவுக்காக வாழ வேண்டும் என்று தீர்மானம் எடுத்தது மட்டுமன்றி அதை தன் வாழ்வில் சாதித்து காட்டியதை தான் தொடர்ந்து வருகிற மாதங்களில் பார்க்கப் போகிறோம்.

அட யாருங்க இவரு? இந்த 2024ல எடுத்த தீர்மானங்களை இந்த ஜனவரியிலேயே கடைப்பிடிக்க கஷ்டப்பட்டோம். இவரு வாழ்க்கை முழுவதும் கடைப்பிடித்து சாதிச்சாரா? அப்படின்னு நீங்க கேக்குறது என் காதுல விழுகுது. தொடர்ந்து வாசிங்க friends யாருன்னு தெரிஞ்சுபீங்க.

வேதத்தை அறி, அன்று தான் நீ அறியப்படுவாய்; அந்தச் சிறுவன் பரிசுத்த வேத எழுத்துக்களை சிறு வயது முதல் அறிந்தவன், ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளாக அறியப்பட்டவன். அவனது பெயரின் துவக்கத்திலேயே தீ எரிவதைப் பார்க்கலாம். இது விசுவாச வீட்டுத் தீ; பற்ற வைத்தவர் பாட்டி; எண்ணெய் ஊற்றியவர் அம்மா; முன்னோர்கள் மூட்டிய விசுவாசத் தீயானது இந்த இளம் வாலிபனுக்குள் ஓங்கி எரிந்தது. அந்தத் தீ இன்றும் அகிலமெங்கும் எரிந்து கொண்டிருக்கிறது.

தீமோத்தேயு என்றால் தேவனை கனப்படுத்துபவன் மற்றும் தேவனால் கனப்படுத்தப்பட்டவன் என்று அர்த்தம். அவருடைய பெயருக்கு ஏற்றவாறே வாழ்ந்து காட்டியவர். இவரது தகப்பனார் ஒரு கிரேக்கர். இவரது தாய் ஐனிக்கேயாள், ஒரு யூத பெண்மணி. இவரது பாட்டியின் பெயர் லோவிசாள். அப்போஸ்தலனாகிய பவுலும், பர்னபாவும் அவர்களது முதல் மிஷனெரி பயணத்தின் போது லீஸ்திரா வந்தபோது இவர்களது குடும்பம் இரட்சிக்கப்பட்டது. தீமோத்தேயுவுக்கு வயது 20 இளம் பிராயமாக இருக்கலாம். உலக பாசங்கள் உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும் வயது இது. ஆனால் தீமோத்தேயு தீய காரியங்களை தீயிலிட்டு



இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்று, ஊழியராக தன்னை அர்ப்பணித்தார்.

இவரது வாழ்க்கையின் இந்த அற்புதமான மாற்றத்திற்கு காரணம் பவுலின் பிரசங்கத்தோடு சேர்த்து, இவரது வாழ்வில் இரு தூண்களாய் இருந்த அவரது பாட்டியும், தாயாரும் ஆவர். இவர்களுக்கு தீமோத்தேயு கீழ்ப்படிந்து இருந்தார்.

இவரது பாட்டி மற்றும் தாயாரின் ஜெப வாழ்க்கையும், அவர்கள் தேவன் மீது கொண்டிருந்த அளவற்ற விசுவாசமும், தானும் அப்படிப்பட்ட ஜெப வாழ்வையும், தேவன் மீது அசைக்க முடியாத அளவற்ற விசுவாசத்தையும் கொள்ள வேண்டும் என்ற ஆசையை அனல் மூட்டி எழுப்பியது.



நாமும் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை churchக்கு போகிறோம். நிறைய ஜெபக்கூடுகைகளில் பங்கேற்கிறோம். அங்கு ஆண்டவரிடம் நம்மை ஒப்புகொடுக்கிறோம். நிறைய தீர்மானங்கள் எடுக்கிறோம். ஆனால் எத்தனை நாள் நாம் அதே சிந்தையோடு நம் ஓட்டத்தை தொடர்கிறோம்? அங்கு சொல்லப்பட்ட வார்த்தைகளையும், நாம் எடுத்த தீர்மானங்களையும் எத்தனை நாட்கள் கடைப்பிடிக்கிறோம்.



நம்முடைய வீடுகளில் நம் பெற்றோர் நம்மிடம் ஜெபி, வேதம் வாசி என்று சொல்லும்போது எத்தனை முறை நாம் அதை அல்லல் தட்டியிருக்கிறோம். பலமுறை ''நீங்களே எனக்குப் பதில் ஜெபியுங்கள், நாங்கள் வாழும் காலம் வேறு, நீங்கள் வாழ்ந்த காலம் வேறு, நாங்கள் இளமையை enjoy பண்ணனும்'' என்ற வீர வசனங்களை எல்லாம் நாம் அவர்களிடம் பேசியிருக்கிறோம் அல்லவா.

ஆனால் பாருங்க friends விதவிதமான பட்டாம்பூச்சிகள் பறக்கும் இந்த இளமைப்பருவத்தை தான் நம் தொடரின் கதாநாயகன் தீமோத்தேயு ஆண்டவருக்கென்று ஒப்புகொடுத்தார். பவுல் அப்போஸ்தலன் மூலமாக தான் கேட்ட வேத வசனங்களை தன் மனதில் வைத்து சிந்தனை செய்து, இயேசுவுக்காய் வாழ தீர்மானித்தார். இயேசுவுக்காய் உலக சந்தோஷங்களை உதறி விட்டு அவருக்காய் எதையாகிலும் சாதிக்கவேண்டும் என்ற முனைப்புடனும், துணிச்சலுடனும் செயல்பட்டார். தனது பாட்டி மற்றும் அம்மாவிற்கு கீழ்ப்படிந்து ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறினார்.

**நாமும் அவரைப் போல் எடுத்த தீர்மானங்களில் உறுதியாக இருந்து, நமது பெற்றோர் நம் ஆவிக்குரிய வாழ்வின் முன்னேற்றங்களுக்காக சொல்லும் ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து துணிச்சலுடன் தீமோத்தேயுவைப் போல ஆண்டவருக்கென்று சாதிக்க களமிறங்குவோமா?**

- வீர சகாப்தம் தொடரும்...

# ஜெபக்கையேடு

பிப்ரவரி 2024

ஜெபம்: டெனிட்டா




## வேலையின்மை

கடந்த 2023ஆம் ஆண்டில் உலக அளவில் 2,61,847 பேர் வேலை இழந்துள்ளனர். paytm நிறுவனத்தில் கடந்த மாதம் 1000 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். கடந்த ஆண்டு 2,141 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். டன்சோ நிறுவனத்தில் கடந்த ஆண்டு மட்டும் மொத்தம் 450 பேர் வேலை இழந்துள்ளனர். ஷேர்சாட் நிறுவனம் தன்னுடைய நிறுவனத்தில் பணியாற்றும் 600 பேருக்கு வேலை நீக்கம் நோட்டீஸ் கொடுத்துள்ளது. இந்தியாவில் மொத்தம் 2 ஆண்டுகளில் இந்நிறுவனங்கள் 90,000 பேரை வேலையில் இருந்து நீக்கியுள்ளன.

### ஜெபக்குறிப்பு

1. உலக அளவில் வேலை இழந்துள்ள 2 லட்சத்து 61 ஆயிரம் பேருக்கும் வேலை கிடைக்க ஜெபியுங்கள்.

2. வேலையை இழந்து தவிக்கும் வாலிபர்கள் தவறான முடிவுகள் எடுக்காமல், அவர்களுக்குள் நம்பிக்கை உண்டாக ஜெபியுங்கள்.

3. 2024ஆம் ஆண்டில் ஆட்குறைப்புகள் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

4. ஐ.டி. நிறுவனங்களில் குறைந்து வரும் முதலீடுகள் பெருகி நல்ல வருமானம் ஈட்டி வேலை வாய்ப்புகள் அதிகரிக்க ஜெபியுங்கள்.

## காற்று மாசுபாடு – புற்றுநோய்

ஆசிய நாடுகளில் அதிகரிக்கும் காற்று மாசு காரணமாக புற்றுநோய் அதிகரித்து வருவதாகவும், இந்தியாவில் புற்றுநோய் பாதித்த 12 லட்சம் பேர்களில் 9.3 லட்சம் பேர் இறந்துள்ளனர். 2019ல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலியானவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் சீனா, இந்தியா, ஜப்பான் நாடுகள் முதல் 3 இடங்களில் உள்ளன. இந்த நாடுகளில் 94 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 56 லட்சம் பேர் இறந்துள்ளனர். புகைபிடித்தல், மது அருந்துதல், சுற்றுபுற மாசுபாடு போன்ற காரணங்களால் புற்றுநோய் ஏற்படுகின்றது.



### ஜெபக்குறிப்பு

1. புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள ஜனங்களுக்கு தேவன் சுகம் கொடுத்து அவர்கள் நீடித்த நாட்கள் பிழைத்திருக்க ஜெபியுங்கள்.

2. புற்றுநோயினால் யாருக்கும் மரணங்கள் சம்பவிக்காமல் தடுத்து நிறுத்தப்பட ஜெபியுங்கள்.

3. புற்றுநோய் கிருமிகள் முற்றிலும் நம் தேசங்களை விட்டு ஒழிய ஜெபியுங்கள்.

4. காற்று மாசுபாடு நம் தேசத்தில் முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபியுங்கள்.




இந்தியாவின் 28 மாநிலங்களில், 8 யூனியன் பிரதேசங்கள் உள்ளன. 543 தொகுதிகள் உள்ளன. 91 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். ஆளும் கட்சியான பி.ஜே.பி. தேசம் முழுவதும் உள்ள 38 கட்சிகளோடு கூட்டணி வைத்து தேர்தலில் போட்டியிடுகிறது. எதிர்கட்சியான காங்கிரஸ் 26 கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுகிறது. இந்தியாவில் அதிக பாராளுமன்ற தொகுதிகளைக் கொண்ட மாநிலம் உத்திரபிரதேசமாகும்.

## ஜெபக்குறிப்பு

1. 2024ஆம் ஆண்டு நடைபெற போகும் பாராளுமன்ற தேர்தலில் தேவ ஆளுகை உண்டாகவும், கர்த்தருக்கு சித்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

2. தேர்தலுக்கு ஆயத்தப்படும் கட்சிகள் எந்த சட்ட விரோத செயல்களிலும் ஈடுபடாதபடிக்கு ஜெபியுங்கள்.

3. நாடு முழுவதும் செயல்படும் 10 லட்சம் வாக்குச் சாவடிகளில் தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபியுங்கள்.

4. தேர்தல் அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் மீது தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபியுங்கள்.

# இயற்கை அழிவுகள்

கடந்த வருடங்களில் லிபியாவை தாக்கிய வெள்ளத்தினால் 4,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 10,000 பேர் காணாமல் போயியுள்ளனர். சீனாவை தாக்கிய சாயோனி சூறாவளியினால் 8,80,000க்கும் அதிகமான மக்கள் வெளியேற்றப்பட்டனர். மொராக்கோவை தாக்கிய நிலநடுக்கத்தினால் ஆயிரக்கணக்கான பேர் பலியாயினர். பெரும் பேரழிவுகள் ஏற்பட்டன. கிழக்கு லிபியாவில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் 4,300க்கும் மேற்பட்ட மக்கள் மரணமடைந்துள்ளனர்.



## ஜெபக்குறிப்பு

1. இயற்கை பேரழிவுகள் இனி எந்த தேசத்தையும் தாக்காதபடி தேவன் பாதுகாத்துக்கொள்ள ஜெபியுங்கள்.

2. நிலநடுக்கங்கள், நிலச்சரிவுகள், பெருவெள்ளத்தினால் அழிவுகள் ஏற்படாமல் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

3. இயற்கை பேரழிவுகளினால் கொத்து கொத்தாக மரணங்கள் ஏற்படுவது தடுக்கப்பட ஜெபியுங்கள்.

4. தேசத்தின் மேல் தேவ ஆளுகையும் பாதுகாப்பும் உண்டாக ஜெபியுங்கள்.



முகப்பு செய்தி:
சதீஷ்

# ஆச்சரியமான அன்பு

## உலகில் மனிதன் மட்டுமல்ல, ஜீவனுள்ள அனைத்துமே அன்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றன.

மனிதன் தனது தனிமையையும், இயலாமையையும் உணரும் போது அவனுக்கு அன்பு தேவைப்படுகிறது. எல்லோருடைய அன்பும் எல்லா சூழ்நிலையிலும் ஒரே மாதிரி இருப்பதில்லை. பள்ளிக் கல்லூரிகளில் படிக்கும் போது ஒருவர் மீது ஒருவர் வைக்கும் அன்பு பாசம், இவை அனைத்தும் பள்ளிக் கல்லூரியை விட்டு வெளியே வரும் போதே முடிவுக்கு வருவதைப் பார்க்கும் போது, உலக அன்பு எத்தனை மாயையானது என்பதை நமக்கு உணர்த்துகிறது.




பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளுக்கு போதுமான அன்பும், அரவணைப்பும் கிடைக்கும் போது அது பிள்ளைகளின் ஒட்டு மொத்தமான வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். ஆனால் இன்றைய நவீன உலகில் பல்வேறு காரணங்களால் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் மீது அன்பையும், அரவணைப்பையும் செலுத்த முடிவதில்லை. இப்படி பெற்றோர்களின் அன்பும் அரவணைப்பும் குறையும் போது, தாங்கள் படிக்கும் இடத்திலோ அல்லது வேலை செய்யும் இடத்திலோ ஒருவர் அன்போடு பேசும் போதோ அல்லது பழகும் போதோ அது ஆறுதலாக மாறி சிலர் மாய்மாலமான உலக அன்பில் போய் விழுந்து விடுகிறார்கள் (Fallen in love).

ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கும் அன்பு என்ற சுபாவமும், பாலுணர்வு என்ற சுபாவமும் கலந்து எதிர்பாலர் மீது ஒரு ஈர்ப்பைக் கொண்டு வந்து, நாளடைவில் அது காதலாக மாறி விடுகிறது. உலகத்தின் பார்வையில் இது சரியாக இருப்பதால் இன்று பள்ளிக் கல்லூரிகளில் படிக்கும் அநேக மாணவ/மாணவியர்கள் இப்படிப்பட்ட அன்பில் சிக்கிக் கொண்டு தங்களது படிப்பையும் எதிர்காலத்தையும் தொலைத்து விடுகிறார்கள். தேவனை அறிந்த பிள்ளைகள் கூட இப்படிப்பட்ட உலக அன்பில் விழுந்து இயேசுவை துக்கப்படுத்தி விடுகிறார்கள். **"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" (2 யோவான் 2:15,16).**

இஸ்ரவேல் ஜனங்களைப் பாதுகாக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சிம்சோன் பெற்றோரின் அன்பையும் எச்சரிப்பையும் உதறி தள்ளி **"திம்னாத்துக்குப் போய், திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டு" (நியா. 14:1)** அவள் வேண்டும் என்றும் சொல்லி கண்களின் இச்சையில் விழுந்தான். **"...அவள் சிம்சோனின் கண்ணுக்குப் பிரியமாயிருந்தாள்" (நியா. 14:7).** உலக அன்பிலும்,



கண்களின் இச்சையிலும் விழுந்தவன் கொஞ்சம் கொஞ்சமாக மாம்ச இச்சையில் விழுந்து தேவனுடைய அழைப்பையும் தரிசனத்தையும் விட்டு விலகிப் போனான். இறுதியாக கர்த்தர் அவனை விட்டு விலகியதால் பெலிஸ்தருக்கு சிம்ம சொப்பனமாக இருந்தவன் வேடிக்கை காட்டும் மனிதனாகி விட்டான். நாமும்கூட தேவனுடைய அன்பையும் பெற்றோரின் ஆலோசனையையும் விட்டு விலகும்போது நம்முடைய வாழ்க்கை வேடிக்கையாகி விடுகிறது. சிம்சோன் தேவனையும், அவர் அவனுக்கு வைத்திருந்த தரிசனத்தையும் விட்டு விலகின போதும் ஆண்டவர் அவன் மீது வைத்த அன்பு மாறவில்லை.

**“சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும்படிக்கு, இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும்” (நியா. 16:28)**
என்று கேட்ட போது சிம்சோன் பாவம் செய்து இழந்த போன பெலனை தேவன் மீண்டும் அவனுக்கு கொடுத்து தன்னுடைய அன்பை வெளிப்படுத்தியது அவருடைய அன்பு எவ்வளவு ஆச்சரியமானது என்பதைக் காட்டுகிறது.

பொதுவாக நாம் தவறு செய்யும் போது நம்மை நெருங்கி இருப்போரின் அன்பையும், அரவணைப்பையும் இழந்து விடுவோம். ஆனால் தேவன் அப்படிப்பட்டவர் அல்ல, அவருடைய அன்புக்கு முடிவே இல்லை. நாம் பாவிகளாக இருக்கையில் தேவன் நம்மீது எவ்வளவு அன்பு வைத்தாரோ அதே அன்பை நாம் இந்த பூமியில் வாழும் வரை வைத்திருப்பார்.

இயேசுவுக்கு பின்பு இவர்தான் ஊழியத்தை நடத்தி செல்ல வேண்டும் என்ற அளவுக்கு பேதுரு ஒரு முக்கியமான நபராக இருந்தார். இப்படி தேவனோடு மிகவும் நெருக்கமாக இருந்த பேதுரு இயேசுவை மறுதலித்துவிட்டு மீண்டும் பழைய மீன்பிடித் தொழிலுக்கு போனதுமட்டுமின்றி மற்றவர்களையும் அழைத்துச் சென்று முழு தேவ திட்டத்திற்கும் விரோதமாக செயல்பட்டார். இப்படி தனக்கு துரோகம் செய்த பேதுருவை இயேசு உயிர்த்தெழுந்த பின்பு தேடிப் போய், **“என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.” (யோவான் 21:17).** அதையும் தாண்டி ‘‘என் ஆடுகளை மேய்ப்பாயாக’’ என்று அவருக்கு ராஜ்ஜியத்தின் பொறுப்பைக் கொடுத்து அவரை பயன்படுத்தியதை பார்க்கும் போது, இயேசு பேதுருவின் மீது வைத்த அன்பு எவ்வளவு ஆச்சரியமானது என்பதை நமக்கு தெரியப்படுத்துகிறது.



**எனக்கன்பான வாலிபர்களே, மனிதர்களின் அன்பு என்பது சில நிபந்தனைகளை அடிப்படையாக கொண்டிருக்கும். ஆனால் தேவனுடைய அன்பு ஆச்சரியமானது. அவர் எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் நம்மை நேசிக்கிறவர். பேதுருவை அழைத்த போது ஆண்டவர் எவ்வளவு அன்பு வைத்தாரோ, அந்த அன்பு பேதுரு மறுதலித்த போதும் இருந்தது. எந்த சூழ்நிலையிலும் இயேசுவின் அன்பு மாறவும் இல்லை, குறையவும் இல்லை. அதுபோலவே அவர் உங்கள் மீது வைத்த அன்பும் மாறாது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.**

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும். வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும். தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (4TH FEB.)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2ND SATURDAY (10TH FEB.)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road,Madurai - 18
9750955548 | 9344759316

## EVERY 2ND SUNDAY (11TH FEB.)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI - BHANDUP (4PM – 6:30PM)**
Bright High School, Village Road,
Bhandup (W), Mumbai – 400078
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3RD SUNDAY (18TH FEB.)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via) Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road (opp Arasu
Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station RoadZion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet, opp. Latha
Steel, E C R Road. 8344433800 |
9442885315

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre,VK Road.
9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
Kamlambal Street,Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4TH SATURDAY (24TH FEB.)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY (25TH FEB.)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
World Revival Prayer Centre,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 25th February
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

எச்சரிப்பின் செய்தி ஜாய்லின்



# நைசா நரகம்!

Hello dear friends! இந்த புதிய வருஷத்தில் ஒரு புதிய article மூலம் உங்களை சந்திப்பதில் ரொம்ப சந்தோஷம். டைட்டிலை பார்த்ததும் கொஞ்சம் லைட்டா jerk ஆகிட்டீங்களா? இந்த நரகம் என்ற வார்த்தையைக் கேட்டவுடன், படித்தவுடன் அநேகருக்கு ஒருவித பயமும் அருவருப்பும் உண்டாகும். ஆனால் ஒரு சிலர் ‘நரகம் என்றெல்லாம் எதுவும் கிடையாது எல்லாம் கட்டுக்கதை’ என்று சொல்லிக்கொண்டு அதைக்குறித்துக் கவலைப்படாமல் ஜாலியா இருக்கிறாங்க.

சிலர் நரகம் அப்படியிருக்கும், இப்படியிருக்கும், புழு, பூச்சி, பாம்பு, தேள் எல்லாம் கடிக்கும் என்று கற்பனையாக யோசித்து பேசுவார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமம் நரகத்தைப் பற்றி என்ன சொல்கிறது என்று பார்ப்போமா?

- அது அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல். (வெளி. 21:8)
- அது நித்திய அக்கினி. (மத்தேயு 18:8)
- அங்கு புழு சாவாமலும் எரிகிற அக்கினி அவியாமலும் அதாவது அணையாமலும் இருக்கும். (மாற்கு 9:44)
- அங்கு மரணம் கிடையாது; சாக நினைத்தாலும் சாக முடியாது.
- அது இருள் சூழ்ந்த ஒழுங்கில்லாத மரணாந்தகாரமுள்ள ஒளியும் இருளாகும், போனால் திரும்பிவர முடியாத இருண்ட தேசம். (யோபு 10:21)
- அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். (மத்தேயு 13:42)
- அங்கு Day and Night நித்திய நித்தியமாக வாதிக்கப்படுவார்கள் (வெளி. 20:10) என்பதாக வேதம் சொல்கிறது

‘‘ஐயையோ நரகம் இவ்ளோ கொடுமையானதா!! இவ்வளவு பயங்கரமான இடத்தைப் பற்றி கூறி ஏன் எங்களை பயமுறுத்துறீங்க’ அப்படின்னு கேக்குறீங்களா...?

உங்களை பயமுறுத்த வேண்டும் என்பது எங்களின் நோக்கமல்ல. ‘‘பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்’’ (எசேக்கியேல் 18:20) என்று வேதம் சொல்லுகிறது. நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் மிகவும் தந்திரமானவன். ஆண்டவர் நமக்கென்று வைத்திருக்கும் உன்னதமான நோக்கத்தை விட்டு நம்மை திசை திருப்ப உலக சிற்றின்பங்களை கொண்டு வந்து ஆசை காட்டி ‘‘இதெல்லாம் தவறில்லை.. எல்லாரும் செய்றதுதானே’’ என்று கூறி ஏமாற்றி நைசாக நம்மை அந்த நித்திய பாதாளமாகிய நரகத்திற்கு கொண்டு போகவே வெறிகொண்டு சுற்றித் திரிகிறான். இதைப் புரிந்து கொள்ளாத அநேக கிறிஸ்தவ வாலிபர்கள் தேவனைக் குறித்த எந்த பயமும்

இல்லாமல் வாலிப நாட்களில் உன் சிருஷ்டிகரை நினை என்ற வேத வாக்கியத்துக்கு கொஞ்சமும் செவி கொடாமல் ''வாலிப நாட்கள் உலக சிற்றின்பங்களை அனுபவிப்பதற்காகத்தானே.. இப்போது இல்லாவிட்டால் எப்போது'' என்று மனம் போல வாழ்ந்து, பிசாசுக்கு இடம் கொடுத்து பாவப்பழக்கங்களில் சிக்குண்டு தங்களுடைய ஆத்துமாவை கறை படுத்திக் கொள்கிறார்கள். அவர்களுக்கு வேதத்தின் வெளிச்சத்தை காட்டி **Alert** செய்வதே இந்த **article**ன் நோக்கம்.

பரிசுத்தமாய் வேதத்தின்படி வாழ்ந்து மரிப்பவர்கள் பரலோகத்திற்கும், பாவம் செய்து மரிப்பவர்கள் நரகத்திற்கும் போகிறார்கள். பரலோகம் இருப்பது எப்படி உண்மையோ, அதே போல நரகம் இருப்பதும் 100% உண்மை. அநேக **scientists** இதை ஆய்வு செய்து உறுதிப்படுத்தியிருக்கிறதை **YouTube**ல் நீங்கள் காண முடியும்.



சிலர் தேவன் அன்புள்ளவர் அல்ல, தேவன் மனிதன் மேல் அன்பாக இருந்தால் பிறகு ஏன் அவர் மனிதனுக்காக நரகத்தை உண்டாக்கினார் என்று கேட்பார்கள். தேவன் அன்புள்ளவர், நம்மை மிகவும் நேசிக்கிறவர். தேவன் தான் நரகத்தை உண்டாக்கினார். ஆனால் அதை தேவன் மனிதர்களுக்காக உண்டாக்கவில்லை. பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் தான் உண்டாக்கினார் (மத்தேயு 25:41).

தேவன் உலகத்தையும் மனிதர்களையும் படைக்கும் முன், பரலோகத்தில் தூதர்களோடு மட்டுமே இருந்தார். அதில் லூசிபர் என்ற ஒரு தூதன் தேவனோடு கூடவே இருந்து கொண்டு அவருக்கு விரோதமாக பாவம் செய்து சாத்தானாக மாறி விட்டான். இவனைப் பின்பற்றின அநேக தூதர்களும் பிசாசுகளாக மாறினார்கள். இவர்களுக்காகத்தான் நரகம் உண்டாக்கப்பட்டதேயன்றி, மனிதனுக்காக உண்டாக்கப்படவில்லை. தேவன் அவருடைய சாயலில் உண்டாக்கி தம்முடைய ஆவியை ஊதி உருவாக்கப்பட்ட மனிதர்கள் நரகம் செல்வதை தேவன் கொஞ்சம் கூட விரும்புவதில்லை.

''துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம்'' (எசேக்கியேல் 18:23) என்று நரகம் செல்லுகிற ஒவ்வொரு ஆத்துமாவுக்காகவும் அவர் கண்ணீர் விட்டு அழுகிறார்.

**But** யாரெல்லாம் தேவனுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாமல் சாத்தானை **Follow** பண்ணி, அவன் கிரியைகளுக்கு உடன்படுகிறார்களோ, சாத்தான் என்ன தண்டனையை அனுபவிக்கிறானோ அவர்களும் அதே தண்டனையை அடைகிறார்கள்.

**Okay Friends வருகிற மாதங்களில், என்னென்ன சிற்றின்பங்களை காட்டி நம்மை ஏமாற்றி பாவம் செய்ய வைத்து நைசாக நம்மை நரகத்திற்கு கொண்டு செல்ல பிசாசு திட்டம் தீட்டுகிறான் என்பதை பற்றியும் இந்த நரக தண்டனைக்கு தப்ப நாம் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றியும் தொடர்ந்து இப்பகுதியில் பார்க்கலாம்.**




**அன்பு நீடிய பொறுமையுடையது :**

**உண்மையான அன்பு கசப்பைத் தூண்டவோ, பழிவாங்கவோ, தண்டிக்கவோ செய்யாமல் சுயகட்டுப்பாடோடு இருக்கும்.**

**அன்பு தயையுள்ளது :**

**உண்மையான அன்பு பொறுமையாக மட்டுமல்லாமல் மற்ற நபரிடம் உள்ள நல்ல காரியங்களை ஊக்குவிக்கும்.**

**அன்பு பொறாமைப்படாது:**

**நான் விரும்புவதை என்னால் செய்ய முடியவில்லை என்றாலும், மற்றவர்கள் செய்வதை உற்சாகப்படுத்தும்.**

தகவல்: வயலா

# NISUIN BERIYTH

(திருமண உடன்படிக்கை)

### "நீசுயின் பெரீத்' – 'அப்படியென்றால் என்ன?' என்று தானே சிந்திக்கிறீர்கள்?

**Marriage Covenant** அல்லது திருமண உடன்படிக்கை என்பதே எபிரேய மொழியில் அவ்வாறு கூறப்படுகிறது. திருமணம் என்பது ஒரு சமூக, சட்ட, உறவுமுறை அமைப்பு ஆகும், அதாவது ஒரு ஆண், ஒரு பெண் இணைந்து இல்லறம் மேற்கொள்ள நடத்தப்பெறும் வாழ்க்கை ஒப்பந்தம். ஒவ்வொருவருக்கும் திருமணம் என்பது வாழ்க்கையில் மிக முக்கியமான முடிவுகளில் ஒன்றாகும். ஏனென்றால் உங்கள் முழு வாழ்க்கையையும் அந்த ஒரு நபருடன் வாழ தீர்மானிக்கிறீர்கள். திருமணத்தன்று மிக்க மகிழ்ச்சியுடன் இணையும் தம்பதிகள் பலர் அதில் நிலைத்து நிற்பதில்லை. இன்றைய நவீன கால கட்டத்தில் திருமணத்தின் முக்கியத்துவத்தை உணராமல் சிறு சிறு காரணங்களால் தன்னுடைய எதிர்காலத்தையும் வாழ்க்கைத் துணையின் எதிர் காலத்தையும் சிந்திக்காமல் எதையும் பொருட்படுத்தாமல் சுயநலத்துடன் 'திருமண விலக்கு' என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர். இந்த பிரிக்க முடியாத பிணைப்பின் மகத்துவத்தை திருமணத்திற்கு காத்திருக்கும் ஒவ்வொரு தேவ பிள்ளைக்கும் உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முதல் திருமணம்

கர்த்தராகிய ஆண்டவர், ஏதேனில் மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார் (ஆதி 2:18). மனிதன் இயல்பாகவே தன்னுடைய சரீரத்தை அதிகமாய் நேசிப்பவன். ஒருவேளை அவனுடைய சரீரத்தில் காயம் ஏற்படுமாயின், வேதனையையும், வலியையும் அவனால் மட்டுமே உணர முடியும். சுகம் உண்டாகும் போதும் அவனால் மட்டுமே உணர முடியும். எனவே தேவனாகிய கர்த்தர் ஆதாமுடைய விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அதிலிருந்து மனுஷியை உருவாக்கினார் (ஆதி. 2:21, 22). ஆகவே தான் ஆதாம், கர்த்தர் தனக்கு கொடுத்த ஏற்ற துணையாகிய ஏவாளை குறித்து என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள் என்று கூறுகிறார். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று வேதமும் அவர்களைக் குறித்துக் கூறுகிறது.

## இருமனம் திருமணம் ஒருமனம்

தேவனுடைய கரம் அவர்களை ஒருமனப்படுத்திற்று (2 நாளா. 30:12) என்ற வசனத்தின்படி தேவனால் உருவாக்கப்படும் திருமணத்தில் அவர் கரம் இறங்கி வந்து கணவன் மனைவி இருவரின் உள்ளங்களையும் ஒருமுகப்படுத்துகிறது.

## கிறிஸ்தவ திருமணம்

கிறிஸ்தவ திருமணத்திற்கும் கிறிஸ்தவர் அல்லாத திருமணத்திற்கும் உள்ள முதன்மையான வேறுபாடு என்னவென்றால் கிறிஸ்தவ திருமணத்தில் கிறிஸ்துவே திருமணத்தின் மையமாக இருக்கிறார். தம்பதிகள் இருவரும் வேதத்தின் அடிப்படையில் கிறிஸ்துவைப் போல வாழ்வதை தங்கள்





இலக்காக கொள்ளும் போது, வலுவான கிறிஸ்தவ திருமண பந்தம் வடிவம் பெறத் தொடங்குகிறது.

'முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது' (பிரசங்கி 4:12) என்ற வாக்குப்படி கிறிஸ்துவோடு இணைந்த கணவனும் மனைவியும் ஒருநாளும் திருமண பந்தத்தில் முறிக்கப்படவே முடியாது. குடும்ப வாழ்வில் கணவனும் மனைவியும் அவர்களோடு சேர்ந்தவர்களும் என்றென்றும் சந்தோஷமாக வாழ்ந்திருக்க வேண்டும் என்பதே ஆண்டவருடைய சித்தம்.

## திருமணம் தெய்வீகமானது

பொதுவாக வாலிபர்கள் கண்களின் இச்சையினால் மாம்சத்தின் இச்சையினால், பெண்களோடு அல்லது வாலிப ஆண்களோடு நண்பர்கள் என்று பழகுகிறார்கள். முடிவில் சிருஷ்டிகரையும் நினையாமல், பெற்றோர், உடன்பிறப்பு என்று யாரையும் கலந்து ஆலோசிக்காமல் தாங்களாகவே திருமணம் செய்து கொள்கிறார்கள். பின் நிம்மதி இல்லை, சந்தோவும் இல்லை, சமாதானம் இல்லை என்று கூறி பிரிந்து விடுகின்றனர்.

ஒரு சகோதரி தனது வாலிப வயதில் தன்னை சிருஷ்டித்த தேவனிடம், ஆண்டவரே என் வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கும் ஞானம் எனக்கில்லை! யாரிடம் விலா எலும்பை எடுத்து என்னை சிருஷ்டித்தீரோ அவரிடம் நீரே என்னை இணைத்து விடுவீராக என்று ஜெபித்தார்களாம். தன் தாயும் தகப்பனும் எந்த மணமகனை பிடித்திருக்கிறது என்று சொல்கிறார்களோ அதுவே தேவனுடைய சித்தம் என்று அறிந்து கொள்வதாக மனதில் எண்ணி இருந்தார்களாம். அவர்கள் கேட்டபடியே அந்த சகோதரியின் பெற்றோர் எந்த மணமகனை பிடித்திருக்கிறது என்று சொன்னார்களோ, அவருடனே திருமணம் நடந்தது. சில வருடங்கள் கழித்து தன் ஜெப சிநேகிதிகளோடு பகிர்ந்த சாட்சி அநேகரை வியக்க வைத்தது. தன் கணவர் தனக்கு கர்த்தர் கொடுத்த 'மற்றொரு தாய்' என்றார்கள். ஒரு தாயின் அன்பு எவ்வளவு விசேஷமானதோ அவ்வளவு சிறந்த அன்பை தன் கணவரில் காண முடிகிறது என்றார்கள். குடும்பத்தின் பாரத்தை கணவரோடு பகிர்ந்துக் கொள்ள ஒரு வேலை கேட்டார்களாம். தேவன் அவர்களுக்கு மத்திய அரசாங்க வேலையைக் கொடுத்தாராம். கற்பத்தின் கனியை கேட்டு ஜெபித்த போது, இரட்டை பிள்ளைகளை ஈவாய் தேவன் அளித்தாராம். எத்தனை மடங்கு ஆசீர்வாதம் பார்த்தீர்களா? அவர்கள் வீடே ஒரு குட்டி பரலோகம் தான்.



இன்னும் பல சுவாரஸ்சிய சம்பவங்களோடு
NISUIN BERIYTH தொடரும்...




# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## (பொன்னேரி)

2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் தேதி திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் வாலிபர் எழுப்புதல் கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். பொன்னேரியை சுற்றிலுமுள்ள கிராமங்களிலிருந்து சுமார் **1200**க்கும் மேற்பட்ட வாலிபர்கள் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். வந்திருந்த வாலிபர்கள் தேசத்திற்காக ஜெபிக்கவும், சுவிசேஷம் அறிவிக்கவும் தங்களை ஒப்புக்கொடுத்தனர். வந்திருந்த அநேகரை புதிய அபிஷேகத்தால் நிரப்பி அனுப்பினார். ஊழியர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். தேவனுக்கே மகிமை!









# நம் தேவனைப் பற்றி தெரிந்து கொள்வோம்

சிறப்புக் கட்டுரை ஜிஷ்யா

## தேவன் நம் கேடகம்....

**தேவனைப் பற்றி பேச சொன்னால், சூப்பரா பேசுவோம். அவர் நல்லவர்! வல்லவர்! போதுமானவர்! அடைக்கலம்! கோட்டை என்று பலவிதங்களில் அவரை புகழ்ந்து சொல்வோம். ஆனால் நம் தனிப்பட்ட வாழ்வில் தேவனின் நாமங்களை அனுபவித்திருக்கிறோமா? பலமுறை வேதத்தில் வாசித்திருக்கிறேன், ஆனால் என் தனிப்பட்ட வாழ்வில் தேவனுடைய கிரியையை இதுவரை நான் பார்த்ததில்லை அல்லது அனுபவித்ததில்லை என்றால், இந்த பகுதி தேவனுடைய செயல்களை உங்கள் வாழ்வில் அனுபவிக்கும்படி உங்களை உற்சாகப்படுத்தும். இந்த ஆண்டு புதிய பரிமாணத்தில், புதிய நாமத்தில் தேவன் உங்களுக்கு வெளிப்படுவாராக!**





இரண்டாம் உலக யுத்தம் நடைபெற்ற நேரமது. ஜெர்மனி தேசத்தை சார்ந்த ஹிட்லர் (**Hitler**) 1939 முதல் 1945 வரை மற்ற தேசங்களோடு போரிட்ட நேரம். இந்த போர்களில் சுமார் 50-56 மில்லியன் மக்கள் இறந்தனர். இப்படிப்பட்ட சூழலில் வில்லியம் டீவர்ஸ் (**William Devers**) என்ற 21 வயதே நிரம்பிய இளம் வாலிபரை தேவன் எப்படி கேடகமாக பாதுகாத்தார் என்பதை பார்க்கலாம்.

**Corporal William Devers**, கடவுள் நம்பிக்கையற்றவர். கடவுளைப் பற்றி அவரது சக வீரர்கள் மற்றும் சாப்ளின் கூறும் எந்தக் கருத்துக்களையும் அவர் எதிர்த்தார். அவர்களின் முதல் போரில், சாப்ளின் உட்பட அவரது பல தோழர்கள் மரித்தனர். ஆனால் சாப்ளின் இறப்பதற்கு முன், அவர் வில்லியமை அழைத்து தன் பாக்கெட்டில் இருந்த பைபிளை எடுத்து வில்லியம் கையில் கொடுத்து 'தயவுகூர்ந்து இதை நீ வைத்துக்கொள்' என்று கூறிவிட்டு இறந்தார். வில்லியம் விருப்பமின்றி சாப்ளினுக்காக அந்த பைபிளை எடுத்து தனது சட்டைப் பையில் வைத்தார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, வில்லியமின் அணி மற்றொரு அலை தாக்குதல்களை எதிர்கொண்டது. அந்த தாக்குதலில் வில்லியம் டீவர்ஸ் சுடப்பட்டார். தன்னுடைய நெஞ்சுப்பகுதியில் வலியை உணர்ந்த அவர், தான் நிச்சயம் இறந்து விடுவதாக எண்ணி தன்னுடைய நெஞ்சில் கை வைத்தார். ஆனால் துப்பாக்கி குண்டு பட்ட இடத்திலிருந்து ஒரு சொட்டு இரத்தம் கூட வரவில்லை, அவர் மரிக்கவும் இல்லை. அவர் மிகுந்த ஆச்சரியத்தோடு எழுந்து பார்த்தபொழுது தன் சட்டை பாக்கெட்டில் இருந்த **Bible** மீது **Bullet** பாய்ந்து சென்று இருந்தது. வேதத்தை அவர் திறந்து பார்த்தபோது, ''உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது'' (சங்கீதம் 91:7) என்ற வசனத்தில் **Bullet** பாய்ந்திருந்தது. அவர் வெறுத்த வேதம் அவரைக் கேடகமாய் பாதுகாத்தது. அன்று மறுஉயிர் பெற்ற அவர் இயேசுவை ஏற்றுக்கொண்டு 83 வயது வரை வாழ்ந்து அநேகரை தன்னுடைய சாட்சியின் மூலம் கர்த்தருக்குள் வழி நடத்தினார்.

வேதத்தில், 2 சாமுவேல் 22:1-4 வசனங்களில் தாவீதை தேவன் எப்படி கேடயமாக இருந்து பாதுகாத்தார் என்பதை பார்க்கிறோம். தாவீதைப் பாதுகாத்த தேவன், **William Devers**ஐ பாதுகாத்த தேவன், உங்களையும் தன்னுடைய சிறகின் மறைவில் வைத்து பாதுகாப்பார். எதிராளியாகிய சாத்தான் எய்யும் எல்லா அக்கினியாஸ்திரங்களையும் கேடகமாய் இருந்து எதிர்த்து உங்களைக் காப்பார். நம்முடைய வேதத்தை இருதயமாகிய பலகையில் வைத்து, தினமும் வாசிப்போம், நேசிப்போம், அறிக்கை செய்வோம். தேவன் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் கேடகமாய் இருந்து பாதுகாப்பாராக!

**சிந்திக்க:**

1. உங்களுடைய ஆபத்தான நேரங்களில் இயேசுவை நோக்கி பார்த்திருக்கிறீர்களா?

2. சாப்ளின் (**Chaplain**) தான் மரிக்கும் தருவாயிலும், தன்னுடைய வேதத்தை கொடுத்து ஒரு உயிரை காப்பாற்றினார். இந்த ஜீவனுள்ள வார்த்தையான வேதத்தைக் குறித்து உங்கள் நண்பர்களிடம் கூறியிருக்கிறீர்களா?

# செய்திகள்!

## ஆசிய நாடுகளில் காற்று மாசுபாட்டால் புற்றுநோய் பாதிப்பு அதிகரிப்பு

## இந்தியாவில் 12 லட்சம் பேர் பாதிப்பு, 9.3 லட்சம் பேர் இறப்பு!

### ஆய்வில் அதிர்ச்சி தகவல்!



ஆசிய நாடுகளில் அதிகரிக்கும் காற்றுமாசு காரணமாக புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருவதாகவும், இந்தியாவில் புற்றுநோய் பாதித்த 12 லட்சம் பேர்களில் 9.3 லட்சம் பேர் இறந்து விட்டதாகவும் அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

தி லான்செட் ரீஜினல் ஹெல்த் தென்கிழக்கு ஆசிய இதழில் வெளியாகியுள்ள கட்டுரையில், "ஆசியாவில் கடந்த 2019ல் புதிதாக புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலியானவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் சீனா, இந்தியா, ஜப்பான் நாடுகள் முதல் 3 இடத்தில் உள்ளன. இந்த நாடுகளில் 94 லட்சம் பாதிப்புகளும், 56 லட்சம் இறப்புகளும் பதிவாகியுள்ளன.

சீனாவில் 48 லட்சம் புதிய பாதிப்புகள், 27 லட்சம் உயிரிழப்புகள் என முதலிடத்திலும், இந்தியா 12 லட்சம் புதிய பாதிப்புகள், 9.3 லட்சம் உயிரிழப்புகள் என 2ம் இடத்திலும், ஜப்பான் 9 லட்சம் புதிய பாதிப்புகள், 4.4 லட்சம் இறப்புகள் என 3ம் இடத்திலும் உள்ளது.

ஆசிய நாடுகளில் புதிதாக புற்றுநோய் பாதித்தவர்களில் அதிகளவில் மூச்சுக்குழாய், நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள். அதன்படி மூச்சுக்குழாய், நுரையீரல் புற்றுநோய் பாதித்தவர்கள் 13 லட்சம் பேர். இவர்களில் 12 லட்சம் பேர் பலியாகி விட்டனர். இந்த பாதிப்பு ஆண்களிடம் அதிகளவில் பதிவாகியுள்ளது.

ஆசிய நாடுகளில் பெண்களை பொறுத்தவரை கர்ப்பப்பை வாய் புற்றுநோய், முதல் 5 இடங்களில் அல்லது 2 வது இடத்தில் காணப்படுகிறது.

ஒட்டு மொத்தமாக கண்டம் மற்றும் நாடுகளில் மார்பகம், பெருங்குடல், மலக்குடல் புற்றுநோய், வயிறு மற்றும் மெலோனா அல்லாத தோல் புற்றுநோய் ஆகியவை, 2019ம் ஆண்டில் அடிக்கடி ஏற்படும் முதல் 5 வகை புற்றுநோய்களாக கண்டறியப்பட்டுள்ளன. ஒருசில நாடுகளில் லுகேமியா, புரோஸ்டேட், கல்லீரல் மற்றும் கணைய புற்றுநோய்கள் பதிவாகி உள்ளன.

புற்றுநோய் ஏற்படுவதற்கான 34 ஆபத்து காரணிகளில் புகை பிடித்தல் மது அருந்துதல், சுற்றுப்புற மாசுபாடு ஆகியவை அதிகம் ஆதிக்கம் செலுத்துகின்றன. அதிகரித்து வரும் காற்று மாசுபாடு காரணமாக ஆசிய நாடுகளில் புற்றுநோய் பாதிப்புகளும் அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**- தினகரன், 4 ஜனவரி 2024.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

நாலுமாவடியில்....

Revival IGNITERS CAMP

# எழுப்புதலைப் பரவச் செய்வோர் பயிற்சி முகாம்...

வரப்போகிற எழுப்புதலில் எழும்பி பிரகாசிக்க, தமிழ்நாட்டில் உள்ள வாலிபர்களுக்கு! **ஓர் அரிய வாய்ப்பு**

வயது : 15 வயது முதல் 30 வயதுவரை (ஆண், பெண் இருபாலரும்)

நாள்: மே 3 வெள்ளி காலை 9 மணி முதல்
மே 5 ஞாயிறு மதியம் 1 மணி வரை
(3நாட்கள்)

இடம்: நாலுமாவடி
தேவனுடைய கூடாரம்

பதிவுக் கட்டணம்:
ரூ. 200/-
மட்டுமே



பயிற்சியாளர்கள் :
**சகோ. மோகன் சி. லாசரஸ்,**
**சகோ. வின்சென்ட் செல்வக்குமார்**



பதிவு செய்ய : revival.jesusredeems.com என்ற இணையதளத்தில் சென்று பதிவு செய்யலாம்.

குறிப்பு: ஏற்கெனவே வாலிபர்களுக்கென்று நடைபெற்ற 3 முகாம்களில் கலந்துகொண்ட வாலிபர்கள் கலந்துகொள்ள அனுமதி இல்லை.

தேர்ந்தெடுக்கப்படும் வாலிப சகோதர சகோதரிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தொடர்புக்கு : 9750955547 / 04639-353535

பதிவு செய்ய கடைசி நாள் : மார்ச் 30

Achievers 2024

தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு பிரார்த்தனை - 2024

## வால்பாறையில்...

நாள்: பிப்ரவரி 11
(ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: மாலை 3 மணி
முதல் 6 மணி வரை

இடம்: பாரிஸ் ஹால்
Holy Trinity Church,
வால்பாறை.

செய்தியும் ஜெபமும்:
**சகோ. சதீஷ் குமார்**

தொடர்புக்கு:
94860 37586 |94428 85315





## சிவகாசியில்...

நாள்: பிப்ரவரி 11
(ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: 2:30 மணி

இடம்: வானத்தின் வாசல்
ஜெபவீடு, சிவகாசி

செய்தியும் ஜெபமும்:
**சகோ.ஜோயல் ஆசீர்**

தொடர்புக்கு:
94860 37586 |94428 85315

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 01 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# Achievers
2024



(தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கான சிறப்பு பிரார்த்தனை )

## தஞ்சாவூரில்...

நாள் பிப்ரவரி 4, (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மதியம் 2 மணி முதல் 5 மணி வரை
இடம்: Parish Hall,
பிளேக் மேல்நிலைப் பள்ளி எதிரில், தஞ்சாவூர்
ஆலோசனையும் ஜெபமும் : சகோ. அவினாஷ்
தொடர்புக்கு: 9489775075, 9444381971, 9942449888

## பெங்களூரில்...

நாள் பிப்ரவரி 10, (சனிக்கிழமை)
நேரம்: மாலை 3 மணி முதல் 5 மணி வரை
இடம்: தெலுங்கு சர்ச் ஹால், நேதாஜி ரோடு,
ஆபீஸ் எதிர்புறம், பிரேசர் டவுன்
ஆலோசனையும் ஜெபமும் : சகோ. ஜோயல் ஆசீர்
தொடர்புக்கு : 9962085523, 9591077110

## கோவில்பட்டியில்...

நாள் பிப்ரவரி 11 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 3 மணி முதல் 5:30 மணி வரை
இடம்: St. Paul's மெட்ரிகுலேஷன் பள்ளி
ஆலோசனையும் ஜெபமும்:
பாஸ்டர் சரவணன் (சென்னை)
தொடர்புக்கு: 9677858766 / 9787322334

## ஜெபமலையில்...

நாள் பிப்ரவரி 18, (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை
இடம்: ஜெபமலை, கீழ மாதாபுரம்
தென்காசி மாவட்டம்
ஆலோசனையும் ஜெபமும் : சகோ. அவினாஷ்
தொடர்புக்கு 8300131000 I 9750955548










## நாமக்கல்லில்...

நாள் பிப்ரவரி 25, (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 4 மணி முதல் 7 மணி வரை
இடம்: கவின் கிஷோர் திருமண மண்டபம்,
உழவர் சந்தை அருகில், நாமக்கல் டவுன்.
ஆலோசனையும் ஜெபமும் : சகோ. அவினாஷ்
தொடர்புக்கு. 9962085523, 94893 01237, 9488618305

தோல்வி பயமா? தேர்வைக் குறித்த கலக்கமா?
படித்தது மறந்து போகிறதா? சந்தேகமா?
இயேசு உங்களுக்கு விடுதலை தருவார்!

பள்ளிக் கல்லூரியில் படிக்கும் மாணவ மாணவியர் கலந்து கொள்ளுங்கள்!
பெற்றோரே உங்கள் பிள்ளைகளை அனுப்பி வையுங்கள்.